தென்னகத்

# தலைவன்

ஆசிரியர் : தினகரன்

மலர் 1 | 3—3—63 | தி. மு. கழக வார ஏடு | விலை 16 காசு | இதழ் 19




# ‘முரசொலி’க்குச் சவால் விடும் சண்டியர்களே!

## திரைகிழித்துக் காட்டுகிறன் ‘தென்னகத் தலைவன்’

## முடிக்கிடப்பதேன் வாய்? முதுகெலும்பில்லையா சொல்?

திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆதரவுக்காக அலைந்து திரிந்து அவமானப்பட்டவர்களில் சவஞானத்திலிருந்து சாக்கடைஓரத்து செங்கொடியினர் வரை எத்தனையோ பேர்கள் இன்னும் உயிரோடுதான் இருக்கிறுர்கள். 52-லிருந்து 62-வரை பொதுத் தேர்தல் நடைபெற்ற போதெல்லாம் கழுத்தறுப்புக் கட்சியினர் கழகத்தின் கதவுகளைத் தட்டுவதற்குத் தவறியதில்லை.

கழுத்திலே கைகொடுத்துத் தள்ளினலும் வருவேன் என்று சொன்னவர் மறைந்துவிட்ட ஜனசக்தி ஆசிரியர்! புதிய ஆசிரியர்களுக்கு இது தெரியா விட்டால் வியப்பில்லை. கந்தசாமி என்ற கம்யூனிஸ்ட் திருச்சி சிறையிலே அண்ணவைச் சந்தித்த போது ‘நாடே உங்கள் பக்கம்தான்’ இருக்கிறது. என்றும் சொல்லியிருக்கிறுர். கட்சியும் கழகமும் முற்போக்கு சக்திகள் என வெங்கட்டராமனும் ‘வெண்ணெய்வெட்டி வீரர்களும்’ முழங்கியதை தமிழ் நாட்டு மக்கள் மறந்துவிடவில்லை.

சென்னை மாநகராட்சி மன்றத்திலிருந்து கோவை நகராட்சி வரை ஏற்பட்டிருந்த உறவுகளை அலிப்பையன்களும் அழகு சுந்தரிகளும் அறியமாட்டார்கள்—சங்கரய்யா, சிண்டன்கள் அறிவார்கள்.

கேரளத்தில் கழுத்தறுப்புக் கட்சியின் அமைச்சரவை பண்டிதராலே மிதித்துத் தள்ளப்பட்டபோது சங்கரன் நம்பூதிரி திருவனந்தபுரம் வீதிகளில் “சங்கர சங்கர சம்போ இந்த மந்திரி வேடத்தில் ஏணிந்த வம்போ” என்று புதிய மார்க்சீயம் படித்தார். கழகம் கேரளத்து முற்போக்குச் சக்தியை ஆதரிக்க வேண்டுமென்று கேட்ட ராமமூர்த்திகளும் கல்யாணசுந்தரங்களும் இதனை மறக்கமாட்டார்கள் — ஆனால் மட்டரக எடுபிடிகள் மறந்துவிட்டார்கள்! ஆனல் ஆயுள் தண்டனைக் கைதிகள் ஆபாசமாகப் பேசுவதற்காகவே காமராசருடைய அடிதண்டங்களாகத் தமிழ் நாடெங்கும் பவனி வந்தனர் மாலை மரியாதைகள் ஏராளம்! கலை மன்றங்களிலிருந்து கசாப்புக் கடைகள் வரை முழக்கம்.

தமிழ் நாட்டுக் கம்யூனிஸ்டுகளின் திருநெல்வேலித் திருவிளையாடல்களையும், சதிவழக்குச் சதிராட்டங்களையும் முன்னேற்றக் கழகத்தவர் எப்போதோ அறிந்தவர் என்றாலும் ஆயுட் கைதிகளை இப்போது தான் அறிமுகப்படுத்த வேண்டிய அவசியம் வந்தது.

கழகத்தின் நெல்லை வழக்கறிஞர்கள் சில செய்திகளைக் கொடுத்து உதவினர்கள். படித்து முடித்த போது எத்தனையோ பயங்கரச் செய்திகளின் தொகுப்பினைக் காண முடிந்தது. **நடராசன் கொலை, காதரைன் லீலை, கல்யாணியின் கண்ணீர், செல்லம்மாளின் சேவை, அங்கம்மாளின் அன்பு, ரயில் கொள்ளை, பாலத்திற்கு நெருப்பு, ரேசன் கடைக்காரரிடம் வழிப்பறி,** இத்தனையும்—சான்றுகளுடன் சென்றவிடமெல்லாம் அரங்கேற்றப்பட்டது. ஆயுள் கைதிகளில் முதல் கதாநாயகனை அழைத்துப் பேசும்படி கேட்டார்கள் அப்பாவித் தொண்டர்கள்! அறிஞர் அண்ணவை தூற்றுவதற்கு நீள அகலத்தில் திறக்கும் வாய் மூடிக்கொண்டது.

கழுத்தறுப்புக் கட்சியின் சீடர்கள் கடிதம் எழுதிக் களைத்துப் போனர்கள். மூக்கானங்கள் மூக்கறுபட்டவர்களாக மூலையிலே பதுங்கினர்கள். சதிவழக்கு விபரங்களை முழுக்கவும் மேடையிலே சொல்ல முடியாமல், எடுத்துச் சொல்லிய என் போன்ருரை ஏசினர்கள்.

வேலூர்-சத்துவாச்சேரி சம்மட்டியினர் கலகத்துக்கு வந்தனர். சென்னையிலே யிருக்கும் 7-வது வட்டாரத்துக் கம்யூனிஸ்டுகள் அரிவாள் சுத்தியல் சின்னமிட்ட சென்னை மாநாட்டு அட்டைக்கடிதத்தில், 12-11-62 இரவு 11 மணியளவில் சென்னை 7-வது வட்டம் கூட்டம் முடிந்து வரும் வழியில் எச்சரிக்கை அனுப்பி வைத்தனர். “**தோழர் கூடலரசனே, கம்யூனிஸ்டுகளை ஒழிக்கக்கங்கணம் கட்டி நின்றஉன்போன்ற வெறியர்களின்சரித்திரத்தைப் புரட்டிப் பார்**” என்று மிரட்டியிருந்தனர். இப்படிப் பல கடிதங்கள் ‘தென்னகத் தலைவன்’ அலுவலகத்துக்கும் வந்துள்ளன. ஆனல் இவர்களில் எவரும் சதிவழக்குச் செய்திகள் பொய்யென்று வாதிடவில்லை. சண்டிப் பத்திரிகையின் சல்லிப் பையன்கள் சவால் விடவில்லை!

தமிழ் நாடு முழுவதும் ‘நடராசன் கொலை’ நாற்றமெடுத்த அரசியல் கட்சியின் ரத்தவெறியைப் புலப்படுத்தியது. ‘காதரைன் கதை’ கண்ணியம் படைத்தவர்களின் கவனத்திலே நின்றது. சேவியர் பாண்டியனின் சேவடியில் வீழ்ந்த மீனட்சிகள்— மணிகள் கூட மறுக்கவில்லை—மயங்கி வீழ்ந்தார்கள்!

நெல்லைச் சதிவழக்கின் முதல் கதாநாயகன்—மதுரை முத்து மீது வழக்குப் போடுவேன் என்று சேலத்தில் பேசினராம். சென்னைக் கூட்டங்களில் “கூடலரசன் மன்னிப்பு வாங்கிவிட்டான். அதனல் அவன் மீது வழக்குப் போடவில்லை” இப்படியும் பேசியதாகத் தோழர்கள் தெரிவித்தனர். நான் சென்னை முதல் வட்டத்தில் பேசும் போது கேட்டேன், “அது உண்மையென்ருல் உன்னுடைய சகதிப்பத்திரிகையிலே ஏன் செய்தி வரவில்லை? இனியாவது மன்னிப்புச் செய்தியை வெளியிடத் தயாரா?” என்று. இன்று வரையில் பதில் இல்லை.

சொரணையுள்ள கம்யூனிஸ்டுகள் என்னைப் புரிந்து வைத்திருக்கிறுர்கள். சொந்தப் புத்தியைச் சோரம்போகவிட்டவர்கள் சொறிப் பையன்களாக இருக்கிறுர்கள். **“எங்கள் கட்சியை விட்டு ஏன் வெளியேறினீர்கள்” என்று கவலையுடன் கேட்டு கம்யூனிஸ்டுகள் எழுதிய கடிதங்களைப் பத்திரமாக வைத்து இன்னும் படித்து ரசிக்கிறேன்!** கட்சியை விட்டு ஓடிவிட்டான் என்றும், அலுவலகத்தை விட்டு வெளியேறிய போது ரகசிய அறிக்கைகளை எடுத்துச் சென்றுவிட்டான் என்றும் மறைந்துவிட்ட மாபெரும் தலைவர், சிவகங்கைக் கல்லூரியிலே தெரிவித்தப் பொய்யுரைகளைக் கேட்ட போது நானே மயங்கினேன்! இப்படியொரு தவறன கணக்கு இருப்பதால் கம்யூனிஸ்டுகள் நான் எழுதும் கட்டுரைகளை அலட்சியப் படுத்தியதில்லை. டாங்கே என்ற வீரத்தலைவனுக்கு வெளிநாட்டிலேயிருந்து கைக்கூலி வருகிறது என்ற செய்தியிலிருந்தே உண்மைகளைச் சொல்வதாக அறிவித்துள்ளனர்.

(8-ம் பக்கம் பார்க்க)




### சபாஷ் பாண்டியா!

“நான் திராவிட நாடு கோரிக்கையைக் கைவிட்டு விட்டதாகச் சிலர் எழுதியும் பேசியும் வருகிறுர்கள். அப்படிப் பேசுகிறவர்களின் உள்நோக்கம் அறிந்துதான் நான் அவர்கள் கூறுவதை எதிர்த்துப் பேசவோ மறுத்துரைக்கவோ விரும்பவில்லை.

நம்மைப் பார்த்துக் கேலியாகக் கேட்கிறவர்கள் “இதோ நான் செய்கிறேன் பார்” என்று தோள் தட்டிக் கிளம்பினல் அவர்களை சபாஷ் பாண்டியா என்று பாராட்டலாம்.

பிரிவினைத் தடைச் சட்டத்தை எதிர்த்துத் தூளாக்க அண்ணதுரைக்குத் தைரியம் இல்லை. நெடுஞ்செழியன் கோழை. கருணநிதி வலுஇல்லாதவர்? என்று கூறுகிறுர்கள். இவ்வாறு கூறுகிறவர்கள் திராவிடநாடு கிடைக்க வேண்டுமென்ற நோக்கத்தில் கூறுகிறவர்கள் அல்லர். என்னை ஆத்திரமூட்டினல் நான் ஏதாவது சொல்வேன் பிறகு அதை அமைச்சர்களிடம் காட்டி அரசாங்கத்தை என்மீது ஏவலாம் என்ற கேடு நினைப்பில் சிலர் முயலுகிறுர்கள்.

உங்களுக்கு ஒன்று சொல்லுவேன். தி. மு. கழகம் அழியாது. உங்களுக்குத் தலை குனிவும் ஏற்படாது. நானும் கோழையாகிவிடமாட்டேன்.




மலர் 1 | 3-3-63 | இதழ் 19

# பிப்ரவரி முடிந்தது - மொரார்ஜி வரி எழுந்தது!

இந்தியத் துணைக்கண்டத்து மக்கள் தங்கள் தலைமுறையில் சந்தித்திராத இருபெரும் துன்ப நிகழ்ச்சிகள் இந்த ஆண்டு நடந்து முடிந்திருக்கிறது.

**ஒன்று சீனப்படையெடுப்பு !**

**மற்றொன்று மொரார்ஜியின் வரி விதிப்பு !**

சீனரின் திடீர்த்தாக்குதல்மூலம் நமது அரசு அடைந்த எதிர்பாராத அதிர்ச்சிக்கு இம்மியும் குறையாத அளவில்தான்—வரையில்லாத வரி விதிப்பும் துணைக்கண்டத்து மக்களை ஒரு உலுப்பு உலுக்கியெடுத்திருக்கிறது.

பாலைவனத்து ஒட்டகம் என்பதற்காக அதன் கழுத்தில் பளுவை எண்ணிக்கையின்றிச் சுமத்துவது தொடர்ந்த பிரயாணத்துக்கு முற்றுப்புள்ளி வைப்பதாகும்.

கலைஞர் மு. க. அவர்கள் கூறியிருப்பதைப்போல் வரி விதிப்பு என்பது மலரிலிருந்து தேனை-வண்டு மென்மையாக எடுப்பதுபோல் இருக்கவேண்டும். மொரார்ஜி மலரையே கசக்கிச் சாறெடுக்கிறார்.

இந்தியத் துணைக்கண்ட சரித்திரம் காணாத அளவுக்கு மொத்தம் 275 கோடியே 50 லட்சம் ரூபாய்க்கு புதுவரிகள் விதிக்கப்பட்டிருக்கின்றன.

நாட்டின் பாதுகாப்பிற்காகவும், திட்டத்தில் துண்டுவிழும் தொகையை ஈடு செய்வதற்காகவும் சர்க்கார் வரி போட்டுத்தான் ஆகவேண்டும்.

ஆனால் வரிவிதிப்பதற்கு முன்—வரி விதிக்கப்படும் பொருளின் உபயோகம், அதன் தன்மை, மக்களின் வாழ்க்கைத்தரம், நாட்டின் சூழ்நிலை ஆகியவற்றை நிதானமாக ஆராய்ந்து உல்லாசிகளின் சல்லாபப் பொருள்கள்மீது மேலும் வரியைத் திணித்து வருவாயைப் பெருக்கிக்கொள்ள முயல வேண்டுமே தவிர— அன்றாடம் காய்ச்சிகளின் அடிவயிற்றில் மிதிப்பது போல் வரி விதிப்பது—பாலைக்கறப்பதற்குப் பதில் மடுவை அறுப்பதாகும்.

அதிக வரி விதிப்பின்மூலம் மண்ணெண்ணை பாட்டில் ஒன்றுக்கு 10 காசு அதிகப்படுத்தப்படும். 5, காசு இருக்கும் தபால் கார்டு இனி 6 காசுக்கு விற்கப்படும். 10 காசாக இருந்த ரிப்ளை கார்டு இனி 12 காசாகும். 3, பைசா செலவில் எழுதிக்கொண்டிருந்த உள்ளூர் தபால் கார்டு இனி 6 காசு செலவில் எழுதித் தொலைக்கவேண்டும்.

தேயிலை, காப்பி, புகையிலை, சோப்பு, பவுடர், ஸ்னோ, கம்பளித்துணி, பருத்தி, தேங்காயெண்ணெய், காகிதம், சணல், பீங்கான், கண்ணாடிகள், தகரத் தகடு, பல்புகள் இப்படி எல்லாப் பொருள்களின்மீதும் சகட்டுமேனிக்கு அள்ளிப்போடப்பட்டிருக்கிறது வரி.

ஏற்கனவே மாநில அரசினரும் மத்திய அரசினரும் போட்டி போட்டுக்கொண்டு தூவி விட்ட வரியால் மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதன்மூலம் ஏற்பட்ட விலைவாசி உயர்வு மேலும் அவர்களின் இடுப்பொடித்து அவர்களை எழுந்திருக்கவொட்டாமல் செய்திருக்கிறது.

தங்கம் பதுக்கப்படுவதைத் தடுக்கக் கொண்டுவரப்பட்ட தங்கக் கட்டுப்பாட்டுச் சட்டம்; ஏழைப் பொற்கொல்லர்களின் தலையில் கொள்ளியாய் விழுந்து அவர்கள் வாழ வழியின்றி அலறித்துடித்துக்கொண்டிருக்கிறார்கள். அதனால் பாதிக்கப்பட்ட பல குடும்பங்கள் சாவின் சந்நிதானத்தைச் சந்தித்து விட்டன.

துன்பப்படுவதற்கென்றே பிறந்துவிட்டவர்களான நெசவாளர்கள் அரசினர் உதவியின்றி தொழில் சீர்கெட்டு தோல் போர்த்திய உடம்புடன் தொல்லைப் பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் வளர்பிறையாகிக் கொண்டிருக்கிறது.

பல குடும்பங்களை வறுமைப்புயல் நாசப்படுத்திக் கொண்டிருக்கிறது.

இத்தனை தொல்லைகளுக்கிடையில் மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கும்பொழுது மேலும் இவர்கள் தலையில் தாங்கமுடியாத வரிச் சுமையைத் தூக்கிப்போடுவது ஈவிரக்கமற்ற செயல்.

எவ்வளவு வரி போட்டாலும் மக்கள் தாங்கிக்கொள்ளும் அளவுக்கு நாட்டில் செழிப்பை உண்டாக்கி வைத்திருக்கிறோமா என்பதை ஆளும் அரசினர் எண்ணிப்பார்க்க வேண்டும்.

இந்த ராமராஜ்யத்தில் உடையின்றி, உண்ண உணவின்றி, ஒடுங்க இடமின்றி அல்லல்பட்டுக்கொண்டிருக்கும் ஆத்மாக்கள்தான் அதிகமே தவிர—யார் ராஜ வாழ்வு வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் ?

ஒரு பாட்டில் மண்ணெண்ணைக்குத்திடீரென 10 காசு அதிகம்.

வறுமையெனும் இருளில் அகப்பட்டு நல்வாழ்வுக்கு வழி தெரியாது தவித்துக்கொண்டிருந்த ஏழைக் குடிமகன் இனி விளக்கையும் அணைத்துவிட்டு குடிசையில்—கும்மிருட்டில் வாழ வேண்டியதுதானா ?

வருவாய் பள்ளத்திலே கிடக்கிறது. செலவும் வரியும் மட்டும் கோபுரத்திலே ஏறிக்கொண்டிருக்கிறது. இதை ஒவ்வொரு ஏழையும் எப்படித் தாங்கிக்கொள்ள இயலும். சிந்திக்க வேண்டாமா ?

ஊர்கூடி இந்தக் கொடுமையைச் சத்தம் போட்டுச் சொல்வதற்கு வழியில்லாமல் '**எமர்ஜென்ஸி எனும் கம்மர்க்கட்**' நாக்கிலே ஒட்டிக்கொண்டு கிடக்கிறது.

"அந்நியன் படையெடுத்து வருகிறானே'' —அது உண்மை!

"நாம் இராணுவத்தைப் பலப்படுத்திக்கொள்ள வேண்டாமா?'' —கூடாது என்பது துரோகத்தனம் !

"இராணுவச் செலவிற்குப் பணம் தேவையல்லவா? அதற்கு வரிப் போட்டுத்தானே ஆகவேண்டும், நாட்டுக்காக எதையும் தாங்கிக் கொள்வதுதானே தேசபக்தி?'' —இங்கேதான் நாம் சற்று நின்று நிதானிக்க வேண்டும்.

**கொடுக்க சக்தி உள்ளவரிடத்தில் பணத்தை வாங்குங்கள்.**

**தேச பக்தி மட்டும் உள்ள ஏழையிடம் வேலை வாங்குங்கள்.**

**மொரார்ஜி ஐயா! அதுதான் நியாயம் ! அதுதான் தர்மம் !**

---

அடுத்த இதழில்...

படிக்கத் தவறாதீர்கள் !

**தினகரன்** எழுதும்—

**"கவிஞர் பெருமானைக் கட்டி அழுதேன் த. தே. க. கொள்கைப் பிணத்திற்கு ஒப்பாரி!"**

---

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

கைவிடப்பட்ட கைம்பெண்களைப் போல் அகில உலக அரசியல் வாதிகள் அழத்தேவையில்லை! "சண்டாளன் இப்படியெல்லாம் சொல்கிறானே" என்று சங்கடப்படுவதற்கு யார் காரணம்? கட்சியின் வரவு செலவுக் கணக்குகளை எவனோ ஏகாதிபத்திய வாதியா எங்களுக்குச் சொன்னான்? மானத்திற்கு மிகவும் அதிகமான மதிப்புத் தருகின்ற மகான்கள், அரசியல் கொலைகளுக்கு, கொரில்லாப்போர் செயல்களுக்குத் தக்க விளக்கத்தைத் தரட்டும்.

கழுத்தறுப்புக் கட்சியினருடைய கடைசித்தரமான கண்ணியமற்ற காலித்தனமான வார்த்தைகள் மட்டும் சதிவழக்கின் உண்மைகளை உடைத்து விடமுடியாது. இரவு ராணிப்பையன்களும் அலிப்பெண்களும் அரை வேக்காடுகள் யாரென்பதை ஒழுங்கான விவாதத்தில் சந்தித்தால் உணரலாம். அவதிப்படுகின்ற சிண்டன்கள், மூச்சுத் திணறுகின்ற ராமமூர்த்திகள், அடிவயிறு துடிக்கும் கல்யாணசுந்தரங்கள் சிறைக்குள்ளே சரியான வசதிகள் இல்லையென்று திருவோடு தூக்கும் வெங்கட்டராமன்கள், அவர்கள் பின்னே படுத்திருக்கும் பார்அட்லாக்கள் என்றாவது ஒருநாள் பதில் தருவார்களா?

உங்கள் சொந்தப் புத்திக்கு சிந்திக்கும் வேலை தராமல் யாரோ சொல்லும் பொய்களுக்குப் பராக்குக்கூறும் கழுத்தறுப்புக் கட்சியினரே! இல்லாத செய்திகளை சொல்லாத வார்த்தைகளை துண்டு வெளியீடுகளிலே தரும்படி தூண்டிவிட்ட துரோகிகளைப் பார்த்துக் கேளுங்கள் குற்றச்சாட்டுகளுக்கு சரியான விளக்கம் தரும்படி! மானங்கெட்டவர்கள்—மன்னிப்புக் கேட்டவர்கள் தூக்கிலிடப்பட்டவர்கள்—விஷங்குடித்துச் செத்தவர்கள் அடுத்த இதழில் சந்திக்க வருகிறார்கள்!

— **கூடலரசன்**

# பஞ்சாப் அரசின் பாவமன்னிப்பு!

**நேருவின் பெயரைச் சொன்ஞல் நீங்குமோ பாவம் எல்லாம்?**

**வஞ்சகத்திற்குத் தலை வணக்கமா, பஞ்சாப் அரசே!**

கொலை செய்தான்; கொள்ளையடித்தான்; கொடுமைகள் பல செய்தான்; ஊரெங்கும் பயங்கரத்தை விதைத்தான். ஆஞலும் அத்தனைக்கும் பாரத அரசு தந்த பரிசு, தூக்குமேடை இல்லை, பூமாலை; புதுவாழ்வு பாவமன்னிப்பு!

“பலபேர் விழிகளைக் குளமாக்கிய கொடுமைக்காரன்; பாவி மகன், அவன் வெளியில் உலவுதலும் தவறு; கையோடு பிடித்து வாருங்கள்!” என்று காவல் துறைக்கு ஆணையிட்ட அரசுதான்‘

“இருட்டில் மறைந்து எங்கெங்கோ ஒளிந்து எங்கள் கண்ணில் மண் தூவும் அவனைக் கண்டுபிடிக்கத் தகவல் தருவோர்க்கு வெகுமதி ஓர் லட்சம் ரூபாய்!” என்று முரசறைந்த அரசுதான்–

இன்று அதே குற்றவாளிக்குப் ‘பாவ மன்னிப்பு’ தந்திருக்கிறது. அவனும் பண்டிதர் பெயரைச் சொல்லிக் கொண்டு பவனி வருகிருன்!

ஐந்தாறுகள் ஓடுமிடம் எனப் பெயர் பெற்றது பஞ்சாப். அங்கேதான் இரத்த ஆறு பெருக்கெடுக்கச செய்தான் தேஜாசிங் சுதந்திரா

கொலை!

ஆயுத மேந்திய கொள்ளை!

ஆயுதச் சட்டத்தை மீறல்!

பாங்கிக் கொள்ளை!

இப்படிப்பட்ட 23 வழக்குகளில் தேடப்பட்ட குற்றவாளி தேஜாசிங்! அவன் ஒரு தீவிர பொதுவுடமைவாதி; முன்ஞேடி!

“கண்டு பிடியுங்கள் அவனை; கொன்று குவிப்போம் இன்றே! இரத்தத்தடாகத்தை உருவாக்கிய ஒருவன் இன்னும் உயிரோடு உலவுவது, நம் சுத்த வீரத்தைப் பழிப்பதாகும்!” என்று மெத்தச் செருக்கோடு முழக்கிய பஞ்சாப் அரசும் உத்தரப் பிரதேச ஆட்சியும் “பிடி வாரண்ட்” பிறப்பித்தன.

ஆணைகளைப் பிறப்பித்துச் சேனைகளை அனுப்பிப் பார்த்தது அரசு; விழியில் விளக்கெண்ணெய் ஊற்றிக் கொண்டு தேடி அலைந்தனர் காவல் துறையினர். ஆஞலும் ஆள் அகப்படவில்லை.

*28-3-1948* அன்று அரசு அறிவித்தது, தேஜாசிங் தலைமறைவாகி விட்டதாக.

வன்முறைப் புரட்சியைப் பன்முறை பல இடங்களில் நடத்திப் பார்த்த இரணதிவே குழு இந்தியப் பொதுவுடைமை இயக்கத் தலைமையைக் கைப்பற்றிய பின்னர்தான் தேஜா தலை மறைந்தான். தலைமையைக் கைப்பற்றிய இரணதிவே குழு, தெலிங்காஞப் புரட்சியைப் பின்பற்றி இந்தியாவின் பிறபகுதிகளிலும் அதேபோல் உழவர்புரட்சிகளை நடத்தும்படி கிளைகளுக்கு ஓலை அனுப்பியது. அதன்பேரில்தான் தேஜாவைக் கைது செய்யும்படியும் அவனது சொத்துக்களைப் பறிமுதல் செய்யும்படியும் பஞ்சாப் அரசு ஆணையிட்டது.

அன்று மறைந்த தேஜா, பதினைந்து ஆண்டுகளாய்க் காவலர் விழிகளில் மண்ணைத் தூவியிருக்கிருன். அவன் கையிலகப்படும் காவலர்தான் ஏமாந்திருக்கின்றனர்.

தலைமறைவானதற்கு ஐந்தாண்டுகளுக்கு பின்னர் ஆஜ்மீரில் உள்ள இராம்கர் வங்கிக் கொள்ளையில் தேஜா தொடர் கொண்டதாகவும் குற்றம் சாட்டப்பட்டது; ஆஞல் குற்றவாளி அகப்படவில்லை.

கைது செய்வதற்கு வாய்ப்பான தகவல்களைத் தருவோர்க்கு ஒரு லட்சம் ரூபாய் தருவதாகவும் அரசு சொன்னது; பயனில்லை!

தேடப்பட்ட குற்றவாளி தான் தேஜா; ஆஞல் தில்லிக்கு மட்டும் இந்தப் பதினைந்தாண்டில் நூற்றுக்கணக்கான தடவைகள் வந்து போயிருக்கிருன்.

தேடப்பட்ட 15 ஆண்டும் தான் பஞ்சாபிலேயே வாழ்ந்ததாகவும் அவன் சொல்கிருன்

புழுவையும் பூச்சியையும் பூட்டி வைத்து வாட்டி வதைப்பதில் மட்டும் போட்டிக்கு ஆளில்லாத அரசுக்குஅவன் நடமாட்டம் தெரியவில்லை.

ஒருமுறை புகழ் வாய்ந்த உணவு விடுதி ஒன்றில் அவன் தங்கியுமிருந்திருக்கிருன். அவன் பலமுறை உள்கட்சி விவாதங்களில் கலந்து கொண்டுமிருக்கிருன். பஞ்சாபின் முன்ஞேடி பொதுவுடைமையரோடு விடாது தொடர்பு கொண்டுடிருக்கிருன்; ஒரு முறை 100-க் மேற்பட்ட ஊழியர்கடளங்கிய பொதுவுடைமையர் கூட்டத்தில் பேசவும் செய்திருக்கிருன்.

தன் பேரில் “வாரண்ட்” இருந்தும் புனைப்பெயர் ஒன்றில் தன்னை வாக்களாளைகப் பதிவு செய்துமிருக்கிருன்; பலமுறை வாக்களித்துமிருக்கிருன், அதைவிட வேடிக்கையானது, இரண்டாம் மூன்ரும் பொதுத்தேர்தல்களில் அவன் வெளிப்படையாகவே போட்டியிட்டதுமாகும்.

காவல் துறையும் அவன் காலில்வீழ்ந்ததோ -- அல்லது கலங்கித்தான் தவித்ததோ; தெரியவில்லை. பஞ்சாப் காவல் துறை பெரிய அதிகாரிகள் பலரின்ஒத்துழைப்போடுபலமுறை தான் கைதாவதிலிருந்து தப்பியிருக்கிருன். குறைந்தது மூன்று தடவையாகிலும் அவன் கைது செய்யப்பட்டிருக்கிருன்; ஆஞல் விசாரணைக்குப்பின்விடப்பட்டுமிருக்கிருன். காரணம்: இவன்தான் தேஜாசிங் சுதந்தரா என்று காவலர்களால் அறுதியிட்டுக்கூறிஅடையாளம் காட்ட முடியவில்லை!

இவனைத்தான் —கொலையில் —கொள்ளையில்— வேறு பல கொடுஞ்செயல்களில் பங்கு கொண்டவனைத்தான் அரசாங்கம் இப்போது மன்னித்து விட்டிருக்கிறது.

சமாதானக்கவுன்சில் என்ற போர்வையில் உலவும் பொதுவுடைமைச் சிந்தாந்த பிரமுகர் டாக்டர் கிச்சலு முதலியோர், பண்டிதநேருவைக் கண்டனராம்; ‘பாவ மன்னிப்பு’த் தரக் கோரினராம். குற்றங்களின் தன்மையை எண்ணி முதலில் ‘மன்னிப்பு’ தர மறுத்த பண்டிதரும் பின்னர் பஞ்சாப்—உ.பி. முதலமைச்சர்களோடுஅது பற்றித் தொடர்பு கொள்வதாகக் கூறிஞராம்; தொடர்பு கொண்டாராம்! பயன். இதுதான். கைக்குக்காத்திருந்த விலங்கும் கழுத்துக்குமாலையாகிவிட்டது: பாவமன்னிப்புத் தரப்பட்டுவிட்டது. பழங்குற்றவாளி இன்று பஞ்சாப் கம்யூனிஸத்தின் புது ஸ்டாராகி விட்டான்!

எந்த நேரத்தில்?

மேற்கு வங்கத்தவர் போன்றே பஞ்சாப் பொதுவுடைமையரும் சீனனுக்கு நாட்டைக் காட்டி கொடுப்பதில் வேகமாக இருக்கின்றனர் என்று குற்றம் சாட்டி, பஞ்சாப் மாநிலச்செயலாளர் உள்ளிட்ட 50 பொதுவுடைமையரைச் சுறையின் உள்ளே அடைத்த வேளையில் தான்.........

எந்த இரணதிவேயைதேஜா பின்பற்றிஞரோ அதேஇரணதிவேதான் இன்றைய துரோகச் செயல்களுக்கு மூலவர் என்று கருதப்பட்டுச் சிறையில் மூடப்பட்டிருக்கின்ற வேளையில் தான்,

தேஜாசிங் சுதந்திரா, சுதந்திர புருஷராக வெளியில்விடப்பட்டிருங்கிருன். அந்த ஆளும் வந்ததும் வராததுமாக “நேரு படை என்ற” பெயரில் அங்கே ஓர் அணியை உருவாக்கி அதற்குத் தலைவருமாகியிருக்கிருன்.

**இந்த நேரு படையும் வெறும் ஐந்தாம் படையே என்பதை காங்கிரசார் விரைவில் உணருவர்.**

**ஏனெனில்..............**

**சர்க்கசில் இருப்பதாலேயே சிங்கம் மாமிசத்தை மறப்பதற்கில்லை.**

**காக்கைக்குநிறம்மாறுவதாலேயே குணமும் மாறி விடுவதற்கில்லை!**

**பொதுவுடைமை வாதியும் அப்படித்தான்!!**

**மா. பாண்டியன்**


மதிப்புரை

## "காய்தல் உவத்தல் அகற்றி, ஆய்தல் அறிவுடையார் கண்ணே உள"

### "நாளை நமதே"

பால் ஒரு பயனுள்ள சுவையான பொருள்!

பாலிலிருந்து தயிரும்-தயிரிலிருந்து மோரும்-மோரிலிருந்து வெண்ணையும்—வெண்ணையிலிருந்து நெய்யும் தொடர்பாகக் கிடைக்கிறது. பாலிலிருந்து நாம் பயன்-பலன் அளிக்கக்கூடிய பல சுவையான பொருள்களைப் பெறுகிறோம்.



இத்தனை சுவைகளுக்கும் மூலப்பொருள் ஆவின் பால்!

வாழைமரம் - தனக்கு வாரிசாக வாழையடி வாழைகளை உற்பத்தி செய்துகொண்டே இருக்கிறது. ஒரு மரத்தோடு ஒழிந்திற்று என்ற குலைநடுக்கம் அதற்கு அறவே இல்லை. வேறு விதை தூவித்தான் அது முளைத்து மரமாகி கனிதர வேண்டுமென்ற நிலைமையும் வாழைக்கு இல்லை. தான் முதிர்ந்து வளரும்பொழுதே தன்னோடு கன்றையும் சேர்த்து வளர்த்து அதையும் கனிகுலுங்கச் செய்கிறது. வாழையின் எந்தப் பாகமும் வீணாவது கிடையாது. அதன் நார்கூட பூமணத்தில் மிதக்கும் சிறப்பினைப் பெற்றது. வாழையின் கனிச்சுவையே—தனிச்சுவை!

ஆவின் பாலைப்போல் மூலப்பொருளாக—வாழை மரத்தைப் போல் வாரிசை வளர்த்து வரும் கனிகுலுங்கும் தருவாக நிற்பவர் **கலைஞர் மு. கருணாநிதி.**

அவர் சொந்தக் குடும்பத்தில் மட்டுமல்ல—கழகக் குடும்பத்தில் கூட அவரைப் போல் பேச்சாற்றல், எழுத்தாற்றல், செயலாற்றல் நிரம்பப் பெற்றவர்களை வளர்த்தே அவர் வளர்ந்திருக்கிறார். பாலிலிருந்து கிடைக்கும் எந்தப் பொருளும் சுவைகுன்றாததைப்போல் அவர் பார்வை பட்டு வரும் எந்தப் பணியும் சோடை போனதில்லை.

பாலிலிருந்து கிடைத்த நெய்போல—வாழையிலிருந்து கிடைத்த கனிபோல—கலைஞரின் பார்வையிலிருந்து பக்குவம் பெற்றவர் **முரசொலி மாறன் எம். ஏ.** அவர் எழுதிய நூல் "**நாளை நமதே**". அந்தக் கனிச்சுவைக்குத் தனியாக ஒரு விமர்சனம் அவசியம் இல்லை,—என்றாலும் நம் உள்ளக் கருத்து இது!

இதயத்தில் விளைந்து கிடக்கும் வைரம் பாய்ந்த ஒரு கருத்துக்கு வடிவம் கொடுத்து—அது இப்படி நடந்திருந்தால்—நடக்குமானால்—நடந்தால் என்று கற்பனை செய்து பார்ப்பது ஆசையின் வேகம். உணர்ச்சியின் தாகம்.

"**நாளை நமதே**"யின் கற்பனை உருவம் இப்படி நடந்தால்...என்பதுதான். ஆனால் நடக்கக்கூடியது.

கண்ணகிக்குச் சிலைவடித்த செங்குட்டுவன் எழுந்து வந்து **அறிஞர் அண்ணா** அவர்களை காஞ்சிபுரத்தில் அவர் இல்லத்தில் சந்திக்கிறார்.

ஜின்னாவும்-அண்ணாவும் பிரிவினைபற்றி உரையாடிக் கொண்டிருக்கிறார்கள்.

நாட்டுக்காகப் போராடி, துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையாகி வீழ்ந்துவிட்ட வீரர்களின் உயிரற்ற உடல்கூட பண்டித நேருவிடம் விடுதலை கேட்டு வீரமுழக்கமிடுகின்றன—அந்த முழக்கத்தைக் கேட்க உங்களுக்கு ஆவலாக இருக்கிறதா? "**நாளை நமதே**" வாங்கிப் படியுங்கள். நமது எதிர்காலத்தின் சரியான கணிப்பு "**நாளை நமதே**".

படிப்பதற்கு மட்டுமல்ல—நாடகமாய் நடிப்பதற்கும் ஏற்ற நூல் '**நாளை நமதே.**'

கலைஞர் அவர்களின் மற்றொரு இளவல் **அமிர்தம்** இந்நூலை அழகுற அமைத்து வெளியிட்டிருக்கிறார்.

**விலை ரூ. 1-50.**

விவரங்களுக்கு:-**முத்துவேல் பதிப்பகம்,** கோபாலபுரம், சென்னை-6.

—**தி.**




**எஸ்.எஸ்.தென்னரசு**

### கனவல்ல!

அதிகாரியின் பங்களாத் தோட்டத்தில் மரங்கள் அடர்த்தியாக இருந்தன. தோட்டத்தைச் சுற்றி கைதிகள் மண் சுவர் எழுப்பியிருந்தார்கள். சுவர் உயரக்கட்டை! நிலவு, மழை மேகத்தையும் துளைத்துக் கொண்டு மங்கலாகத் தெரிந்தது. திட்டமிட்டபடி ராவுத்தரைப் போல் சிங்கராயன் கைலி கட்டிக்கொண்டு சுவருக்கு வெளியே நின்று கொண்டிருந்தான். முதலில்வீரணனுக்கே அடையாளம் தெரியவில்லை. தலையிலிருந்த பட்டுத் தொப்பியை கையில் எடுத்த பின்னர்தான் வீரணனால் அவனைத் தெரிந்துகொள்ள முடிந்தது.

"வீரணா! சௌக்கியமா?"

"இதோ என்னைத்தான் பார்க்கிறாயே!"

"ஏதோ நடந்து விட்டது! நடப்பதைக் கவனிப்போம்!"

"இனிமேல் நீதான் எல்லாம் செய்ய வேண்டும்."

"செய்வதைப்பற்றி ஒன்றுமில்லை! என்னை அவதூறாகக் குற்றம்சாட்டிய செவந்திமாலையை நினைத்தால் இன்னும் என் மனம் துடிக்கிறது வீரணா!"

"விட்டுத்தள்ளு! அவள் சின்னப் பெண் தானே!"

"வீரணா, வருத்தப்படாதே! நான் இரங்கூனை விட்டுப் புறப்படும்போது சித்திரவேலுவிடத்தில் ஒரு நிபந்தனை போட்டு விட்டுத்தான்வந்திருக்கிறேன்."

"என்ன அது! என்னிடம் சொல்லக் கூடாதா? எங்களை விடுதலை செய்யும் உனக்கு எது வேண்டுமானாலும் நாங்கள் செய்வோம்!"

"எனக்குப் பொன் வேண்டாம்! பொருள் வேண்டாம்! எனது வாழ்க்கையில் தணியாத வெறி! செவந்திமாலை என் கைக்கு வரவேண்டும்! அவளைப் பழி வாங்க வேண்டும்."

"என்ன!"

"விடுதலை என்றால் சாமான்யமாவீரணா!"

"சிங்கராயா!"

சிங்கராயன் சிரித்தான்.

"சிங்கராயா, இந்தப் பேரத்திற்காகவா இங்கு வந்தாய்?"

சிங்கராயன் மீண்டும் பலமாகச் சிரித்தான். வார்த்தைகள் பழுத்தன.

தோட்டத்திற்குள், மாலையில் கைதிகள் வேலை பார்த்துவிட்டு வைத்துப்போன மண்வெட்டி ஒன்று கிடந்தது. வீரணன், அதைக்கொண்டு முழுபலத்தையும் தாங்கி சிங்கராயனைத் தாக்கி விட்டான்.

சிறைக் காவலன் மணி பத்தடித்துவிட்டான். வீரணன் மண்வெட்டியை போட்டுவிட்டு சிறைக்குள் ஓடினான். அதிகாரி ஜகதீசன் உலாத்திக்கொண்டே நின்றார். வீரணன் அவர் காலில் விழுந்தான். ஜெகதீசன் அந்த வணக்கத்தை ஏற்றுக் கொள்ளும் தோரணையில் புன்முறுவல் பூத்தார்.

இரவு முழுவதும் தூங்கவே இல்லை. ஏதோ பாடிக் கொண்டே இருந்தான். அவனையுமறியாமல் வந்த பாட்டுக்கள் அவை.

பொழுது விடிந்தது. வீரணன் பைத்தியம் பிடித்தவனைப் போல் வரிசையில் நின்றான். கஞ்சி ஊற்றப்பட்டது. உப்புக் கூட வாங்காமல் வழக்கமான மரத்தடிக்குப் போய் கண்ணை மூடிக்கொண்டு குடித்தான்.

கூட்டாளிகள் வந்து பேசினார்கள்.

பதில் பேசவில்லை, அவன். வேலைக்குப் போக அழைத்தார்கள்.

அதற்கும் அவன் பதில் பேசவில்லை. அவனுக்கென விடப்பட்டிருந்த ஒட்டுத்திண்ணையில் போய் தலையைச் சாய்த்துவிட்டான்.

பிற்பகலுக்குமேல், வெளித் தகவல்கள் படிப்படியாக உள்ளே வந்தன!

"நமது சிறைக்கு எதிரே உள்ள பாதையில் ஒருபெரிய பணக்காரன் இறந்து கிடக்கிறான். கார் அடித்து விட்டதாம்! பாதி ராத்திரியில் ஓலம் கேட்டதாம்!" என்று ஒரு தகவல் வந்தது.

"இல்லை! ஒரு பெண்ணைக் கடத்திக்கொண்டு வந்தானாம் ஒரு சேட்! பெண்ணுக்குச் சொந்தக்காரன், பெண்ணை மீட்டுக்கொண்டு, சேட்டை வெட்டிப்போட்டுவிட்டுப்போய் விட்டானாம். அந்த பெண் இப்போது போலிஸ் ஸ்டேஷனில் இருக்கிறாளாம்" இப்படியொரு தகவல்.

ஒட்டுத் திண்ணையில்சாய்ந்து கிடந்த வீரணனுக்கு இந்த வதந்திகள் உலவுவது தெரியாமலில்லை. தெரியும்! ஒரு மாத காலம் அந்த வதந்திகள்சிறைக் கூடத்தையே அரற்றிக் கொண்டிருந்தன.

ஒரு நாள் பகல், பெரியபெரிய அதிகாரிகளெல்லாம் சிறைக்கு வந்திருந்தார்கள். சிறை மிகவும் சுத்தமாக வைக்கப்பட்டிருந்தது. சிறை அதிகாரியின் பணியாள் ஒருவன் வந்து வீரணனை அழைத்துப்போனான். வீரணன் உயிர் அவனிடத்தில் இல்லை. போய்விட்டது போன்ற உணர்ச்சி!

சிறை அதிகாரியின்அறையில் பலபெரிய அதிகாரிகள் உட்கார்ந்திருந்தார்கள். வீரணனுக்கு முன்பே செவந்திமாலை அழைத்து வரப்பட்டிருந்தாள். கைக்குழந்தையும் அவள் இடுப்பில் இருந்தது.

யார் முகத்திலும்குணத்தைக் கண்டுபிடித்து விடலாம்! போலீஸ் இலாகாவினரின் முகத்தில் மட்டும் எந்தஅறிகுறியையும் காணமுடியாது. உத்தியோகத்திற்குப் போகும்போதே இருதயத்தைக் கழற்றி மனைவியிடம் கொடுத்து விடுகிறார்கள்-என்பது வீரணனின் பழைய சித்தாந்தம். அன்றும் அந்த சித்தாந்தம் அவன் நினைவுக்கு வந்தது.

"வீரணா, உனக்கும் உன் மனைவிக்கும் அரசாங்கம் ஒரு தனி உத்தரவு பிறப்பித்திருக்கிறது. சிங்கராயன் என்ற பேர்பெற்ற கொள்ளைக்காரனை நீயும் உன் மனைவியும் சதி செய்து தேவகோட்டை அருகே கொன்றது

(10-ம் பக்கம் பார்க்க)

## நாங்கள் கேட்கிறோம்-
## நீங்கள் சொல்லுங்கள்!

அடுத்த இதழில்...

### உங்கள் சிந்தனைக்கு ஒரு வேலை!

இத்தனை நாட்களாக நீங்கள் கேள்வி கேட்டீர்கள். 'வணங்காமுடி' யார் பதில் சொல்லிக்கொண்டிருந்தார். அடுத்த இதழிலிருந்து வணங்காமுடியார் உங்களிடம் கேள்வி கேட்கப் போகிறார். நீங்கள் பதில் சொல்லவேண்டும்.

**உங்கள் சிந்தனைக்கு - திறமைக்கு**

ஓர் புதிய பகுதி

**நாங்கள் கேட்கிறோம்?**

**நீங்கள் சொல்லுங்கள்.**

## ஓடாதே நில்!

"சபாஷ் அருமையான கேள்வி! இந்தக் கேள்விக்கு விசிலடிச்சான் குஞ்சுக என்ன பதில் சொல்லப் போகுதுகன்னு பார்ப்போம்"

"அட, நீ ஒண்ணு அதுகளுக்கு ரோமாபுர ராணியைத் தெரியும். தமிழைப் பற்றி என்னப்பா தெரியும்?"

"சரியாச் சொன்னீங்க கட்டபொம்மன்! அதுகளுக்குத் தமிழ்ன்னு ஒரு மொழி இருக்குதான்னே தெரியாது."

"என்னப்பா "லைக்கா" கட்டபொம்மனை 'ஓவரா' பாராட்டுகிறாயே என்ன விவகாரம்?"

"யாரது அறிவகத்துத் தம்பியா? என்னை லைக்கான்னு கூப்பிடும் பொழுதே தெரியுதே!"

"நீ, தானப்பா பெருமைப்பட்டுக் கொள்ளுவாய் பொறந்தா '**லைக்கா**'வாப் பொறக்கனும்! சந்திரமண்டலம் போய்த் திரும்பலாம். எங்கள் ஒரே தலைவன் குருஷாவ் கையில் தவழலாம். மாஸ்கோ நகரமே திரண்டு வரவேற்புக் கொடுத்துப் பாராட்டும்! நாய் ஜென்மம் எடுத்தாலும் ரஷ்யன் நாயாத்தான் பொறக்கனுமின்னு நீதானே சொல்லுவே"

"கேலி கிடக்கட்டும். 'தமிழ் மொழிக்காக தமிழ் நாட்டுக்காக நீங்க என்ன செய்திருக்கீங்க விரலை மடக்க முடியுமா"ன்னு ம. பொ. சிவஞானம் கேள்வி கேட்டிருக்காரு. இது அருமையான கேள்வியில்லையா இதற்கு உங்கள் பதிலென்ன?"

"தி. மு. கழகத்தைப் பார்த்தா தாய் மொழிக்கா—தமிழ் நாட்டுக்காக என்ன செய்திருக்கீங்கன்னு கேள்வி கேட்கிறீங்க? இதைக் கேட்க உங்களுக்கே வெட்கமாக இல்லை?"

"சுத்தி வளச்சுப் பேசாதே தம்பி! எனக்கு மீசை துடிக்குது. நேரடியாப் பதில் சொல்லு! எங்கள் தலைவரின் முத்தான கேள்விக்கு உன் பதிலென்ன?

தூய தமிழ் வளர்ச்சிக்காகப் பாடுபட்ட **மறைமலையடிகள்** அவர்களும் **திரு. வி. க.** அவர்களும் ஏட்டினிலே கண்டு வைத்திருந்த கனவை நாட்டிலே நடமாடச் செய்தவர்கள் நாங்கள். தூய தமிழ் சொல்லோடு வேற்று மொழிதனைக் கலந்து தமிழின் தன்மையை-தொன்மையை மாற்றார் அழித்தொழிக்க அலைந்து திரிந்தபோது உயிர் கொடுத்துக் காத்தவர்கள் நாங்கள். நாட்டில் நடமாடிய எத்தனையோ சமஸ்கிருதச் சொற்களை இல்லாதொழித்து இதைக் கூறுங்கள் என்று நல்ல தமிழை நாட்டினர்க்கு எடுத்தெடுத்துச் சொன்னவர்கள் நாங்கள்!

மறைந்துகிடந்த வணக்கத்தைமன்றத்துக்குக் கொண்டு வந்தவர் யார்? விவாகசுப முகூர்த்தத்தை **திருமண அழைப்பிதழாய்** தேன் தமிழில் செய்தவர் யார்? பாஷையை மொழியென்று பட்டியெல்லாம் சொன்னவர் யார்?

பூமணக்கும் திருமணத்தில் புரியாத மொழிநீக்கி, நாமணக்கும் நம் தமிழை வாழ்த்துரையாய்ச் செய்தவர் யார்? சேரன், செங்குட்டுவன்' சோழன். கரிகாலன்,பாண்டியன் மணிவண்ணன், பூங்கோதை, பொன்னழகி, பூமாலை,மான்விழி, தேன்மொழி இப்படி நல்லதமிழ் பெயரை நாட்டின் செல்வங்களுக்கு அறிந்து வைத்தவர் யார்? தெரிந்து மாற்றிக் கொண்டவர் யார்?

வள்ளுவர் சாலையென்றும், இளங்கோ விடுதியென்றும், மறைமலை மன்றமென்றும், செந்தமிழ்படிப்பகமென்றும் சொன்னவர் நாங்களன்றி சோதாக்கள் யார்? யார்?

அரசுக்கு வந்துவிட்டோர், அவசரமாய்; எந்தன் மொழி கெடுக்க-இந்தி மொழி திணிக்க துப்பாக்கி துணை கொண்டு தொடை தட்டி வந்தபோது- தாளமுத்துவை-நடராசனை பலி கொடுத்து தமிழ் காத்தவர்-தாய்மொழி காத்தவர் தி.மு.கழகத்தவரையன்றி வேறு யார்? விரலை மடக்க முடியுமா?

அன்னைத் தமிழ் அழிந்துவிடாமல் அழகு பவனி வருகிறதென்றால் 'அதற்குக் காரணம் தி.மு. கழகம் ஒன்றுதான்'

இந்திச் சனியனுக்கு வால் பிடிக்கும் ம.பொ.சிவஞானமா இந்தக் கேள்வியைக் கேட்பது வெட்கக்கேடு!

கட்டபொம்மன்! எங்கேய்யா "லைக்கா" வைக் காணோம்"

"அவன் நழுவி வெகு நேரமாகிவிட்டது! அறிவகத்துத் தம்பி என்னை மன்னித்துவிடப்பா!"

"தவறு செய்தது நீ,அல்ல; உன் தலைவன்—போ! போ!!"

## மிரட்டல் கடிதம் எழுதும் பிடாரிகளே

## வெட்டிச் சிதைப்பீரோ எம்மை !

# வேங்கைப் புலிகளன்றோ நாங்கள்!

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தங்கமணி - ராமமூர்த்தி - கல்யாணசுந்தரம் - மாஜினி - மதுரைத் தலைவர்கள் இப்படி எண்ணற்றோர் 'டாங்கே எங்கே?' என்று தொடர்ந்து தரப்பட்ட வினாக்களுக்கு விடைதராமல் விழித்தவர்கள் தான். அதைப் போலவேதான் சதிவழக்குச் செய்திகள் சந்திக்கு வந்துள்ளன.

**தென்னகத் தலைவன்**-உதய சூரியன்- முன்னேற்றம்- நல்ல செய்தி போன்ற கழக ஏடுகள் கழுத்துக்கு அரிவாள் பரிசு தரும் செய்திகளை வெளியிட்டன. அரிவாள் கட்சியின் அகில உலகப் பேரறிஞர்கள் படித்து விட்டுப் பதறினர்கள். வெளியே எதைச் சொல்லி மறுப்பது என்று எவருக்கும் தெரியவில்லை! யாரோ ஒரு தோழர் எழுதிய ஆசிரியர் கடிதம் கழக **'முரசொலி'**யில் அச்சிடப்பட்டு விட்டது. அதனலே தங்களுடைய மானத்திற்கு நட்டம் வந்துவிட்டதாக நோட்டீஸ் அனுப்பினர். தவறுக்கு வருத்தம் தெரிவிக்கப்பட்டது. விபரங்கள் பின்வருமாறு.

ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது பல குற்றங்களுக்காக! கடிதம் எழுதியவர் ஒரே ஒரு செய்தியை எண்ணிக்கொண்டு நீதிபதி கூறியுள்ளார் என்று குறிப்பிட்டுவிட்டார். இதுதான் ஆட்சேபனைக் குரிய தவருகும். மாறிவிட்ட வாசகம் மானத்துக்கு நட்டம் தந்துவிட்டதாகக் கருதப்பட்டதால் வருத்தம் தெரிவிக்கப்பட்டது..

24-9-62 'சனசக்தி', 2-10-62 **'முரசொலி'** செய்திகள் இதற்கு அடிப்படையாகிவிட்டன. 8-1-63 **'முரசொலி'** இதழ் தந்த விளக்கம் வருத்தம் தெரிவிப்பதாகும். ஆனல் சகதிப்பத்திரிகை 9-1-63 இதழில் 'பாலதண்டாயுதம்பற்றி ஆதாரமற்ற செய்தி வெளியிட்டேன். தவருகப் பிரசுரித்ததற்கு வருந்துகிறேன். 'முரசொலி' ஆசிரியர் **கருணாநிதி** மன்னிப்புக் கேட்கிருர்' என்றெல்லாம் தலைப்புச் செய்திகள் தரப்பட்டன. இதுபோன்ற முறையில் இதே வார்த்தைகளைப் பயன்படுத்தி **'முரசொலி'**யில் தெரிவிக்கப்பட்டதாக எந்தத் தற்குறியும் கூறமுடியாது. "தவருகப் பிரசுரித்ததற்கு வருந்துகிறேம்" இதுதான் **முரசொலி**யின் வாசகம். ஆனல் முற்றிலும் முரண்பட்ட வகையில் முட்டாள்தனத்தை வெளிக்காட்டிய இதழ் கழுத்தறுப்புக் கட்சியின் அதிகாரபூர்வமான பத்திரிகை. **'முரசொலி'** 11-1-63 இதழில் கடிதத் தொடர்புகளின் விளக்கம்பற்றி குறிப்புத் தரப்பட்டது. 'வருந்துகிறேம்' என்ற வார்த்தையை ஆயுட்கைதியின் வக்கீல் முதலில் ஒப்புக் கொள்ளவில்லை.

"இந்தப் பிரசுரத்தால் விளைந்த மானநட்டத்திற்கு அவரது மன்னிப்பைக் கோறுகிறேம்" என்று கேட்டிருக்கிருர். வழக்கை நீதிபதியின் முடிவிற்கே விட்டுவிடுவது என்ற **'முரசொலி!'**யின் முடிவு மோகன், "மன்னிப்பு கேட்கும்" வார்த்தைக்குப் பதில் 'வருத்தம்' போதுமென்றதால் மாற்றப்பட்டது. 'மன்னிப்புக் கேட்டதாக' என்கிற வார்த்தைகளை எக்காரணம் கொண்டும் உபயோகிக்கத் தயாராக இல்லை யென்று **'முரசொலி'** சொன்னதை முக்காட்டுத் தலைவர்கள் ஒப்புக்கொண்டனர். ஆனல் கலைஞர் அவர்கள் மன்னிப்புக் கேட்டதாகச் சொல்லியது மட்டுமில்லாமல் துண்டு வெளியீடுகளும் பறந்து கொண்டுள்ளன. இருதரப்புச் செய்திகளையும் சரியாகப் படித்துப் புரிந்து கொண்டவர்கள் சகதிப் பத்திரிகையிலே இல்லை.

ஆயுட்கைதிகள் தாங்கள் திருட்டுத்தனமாக வெளியிட்ட பொய்யான தலைப்புச் செய்திகளைத் தங்களது அடியாட்கள் அச்சிட்டு வெளியிட அனுமதியும் தந்தனர்.

சதிவழக்கைப்பற்றிப் பேசப்பட்ட பேசப்படுகிற இடங்களில் இவைகளைப் பரப்ப வேண்டுமென்று கேட்டுக் கொண்டனர். உண்மையைத் தெரிந்து கொள்ளாமல் சகதிப் பத்திரிகையின் பொய்யுரைகளை ஏற்றுக்கொண்டவர்களுக்கு இத்தனைத் திறன் இருப்பதாகத் தெரியவில்லை.

**'முரசொலி'** ஆசிரியர்கள் எவரும் எழுதவில்லை. **கலைஞர் கருணாநிதி** 2-10-62 நாளன்று திருச்சி சிறையிலே இருந்தார்! அவர் எழுதிய ஏதாவதொன்றைப்பற்றி ஆட்சேபனைஎழுப்பியிருந்தால் மண்டுகளுக்குக்கூட மண்டையிலே கொஞ்சம் இருப்பதாக ஏற்றுக்கொள்ளலாம். ஆனல் வருத்தம் தெரிவித்த செய்தி ஒன்றை மட்டும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு தங்கள்மீது படிந்துவிட்ட ரத்தக்கரையைத் துடைத்துக்கொள்ளத் துடிக்கிருர்கள். துவண்டு போனதுகள் துள்ளித்திரிகின்றன.

யாரோ எழுதிய ஒரு வரி அவர்களின் மானத்தை நட்டப்படுத்திவிட்டதென்ருல் **'தென்னகத் தலைவன்'** வெளியிட்டிருக்கும் கட்டுரைகள் அவர்களது நெஞ்சைத் துளைத்திருக்க வேண்டும். யாருக்காகவோ மானத்தை நட்டப்படுத்த விரும்பாத வீரர்கள் இப்போது ஊரெங்கும் இருக்கும் துண்டு வெளியீட்டுத் தொண்டர்களுக்கு என்னபதில் வைத்திருக்கிருர்கள்!

நெல்லைச்சதிவழக்கின் நெடுங்கதையை மறுக்கப் போவதாக ஒரு அலிப்பையன் இரவு ராணிகளின் செல்லப்பிள்ளை கேட்கிருர்! ஆனல் எத்தனையோ ஆயுட்கைதிகள், டேவிட்டுகள், ராசாமணிகள் கூட்டத்திலே உட்கார்ந்து கேட்டார்கள். கேட்டுவிட்டு ஆத்திரப்பட்டுப் பேசவில்லை. "இதையெல்லாம் இப்போது சொல்லலாமா?" என்றுதான் சொன்னர்கள்.

சவால் விடுகின்ற சண்டியர்களும் ரௌடிப் பேச்சாளர்களும் சதிச் செயல்களைச் சரியான சான்றுகளுடன் எதிர்க்க முடியாமல் 'குட்டிகளையும் புட்டிகளையும்' பேசித் தங்கள் கட்சியின் கண்ணியத்தைக் காப்பாற்றிக்கொள்ளத் தடுமாறுகிருர்கள்!

இதுவரையிலும் பேனவும் காகிதமும் வாங்க வக்கு, வகையில்லாவிட்டால் இனிமேலாவது முன்வரட்டும்! வழக்கிலே சம்பந்தப்பட்ட வக்கீல்கள், தண்டனைக்குத் தங்களை ஒப்படைத்த மனித மிருகங்கள் முன்வருவார்களா?

**'முரசொலி'**யின் உண்மையான செய்திகளை உதறித் தள்ளிவிட்டுப் பொய்களைப் பரப்பும் பிராட்வே கட்சியினர், தமிழ்நாடு முழுவதும் விற்பனை இயக்கம் துவக்கியிருக்கிருர்கள். இந்தச் சுற்றுப்பயணத்தில் சதிவழக்குக்குற்றச் செய்திகளைத் தக்க ஆதாரங்களைக் காட்டி விளக்கிச் சொல்லட்டும்! அந்த உயரிய, மான உணர்ச்சி இன்றுவரை எவருக்கும் வரவில்லை. இனி என்ருவது வருமா?

(3-ம் பக்கம் பார்க்க)



## 14 காரட் சர்க்கார் வீட்டுக்குப் போகும்!

"அமைச்சர் வெங்கட்ராமன் நேற்றுக் குறிப்பிட்டிருக்கிருர். 14 காரட்டில் நகை செய்யமுடியாது என்கிற பொற்கொல்லர்கள் 18, காரட் எனப் பொய் சொல்லி 12 காரட்டில் நகை செய்து ஏமாற்றியவர்கள் என்று பேசியுள்ளார். ஒருவேளை நான் இதைச் சட்டசபையில் கேட்கும்போது கனம் அமைச்சர் அவர்கள் பத்திரிகைச் செய்தியை நம்பலாமா என்று சொல்லக்கூடும். வேதனையடைந்துள்ள பொற்கொல்லர்களை மேலும் மேலும் வேதனைக்குள்ளாக்குவது நல்லதல்ல. யாரோ ஒருவர் தவறு செய்வதால், அதற்காக அந்தச் சமுதாயத்தையே குறைகூறுவது தவறு. நேற்றுக்கூட ஒரு பத்திரிகையில் யாரோ ஒரு மத்திய அமைச்சர் லஞ்சம் வாங்கினதாகச் செய்தி கண்டேன். அதற்காக மந்திரிகள் அனைவரும் லஞ்சம் வாங்குபவர்கள் என்று சொல்லிவிட முடியுமா?

சொன்னதுதான் சொன்னர்களே ஒரு 15 காரட் என்ருவது சொல்லியிருக்கக்கூடாதா?

ஏனென்ருல் 14 என்ற எண்ணே பழங்காலந் தொட்டு ஆபத்தான எண்ணாக இருந்து வருகிறது. ஈரேழு 14 லோகத்தை ஆளவேண்டும் என்றுதான் புராண காலத்தில் அரக்கர்கள் சொன்னர்களாம். சொன்னவர்கள் அப்படி ஆண்டதாகத் தெரியவில்லை. 14 ஆண்டு காலம் கானகத்துக்கு ராமனை அனுப்பிய கைகேயி அடுத்த நாளே விதவையானுள்.

இந்தச் சர்க்காரும் ஆட்சியிலிருந்து வீட்டுக்குப் போகப் போகிறது போலிருக்கிறது. ஆகவேதான் 14 காரட் திட்டம் போட்டுள்ளது."

# கைபடாத மாம்பழமே! கற்கண்டுப் பலாச் சுளையே!

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆசை அலைகள் பெண்மை என்னும் கரைநோக்கிப் பாய்கிறது.

**அன்னமே தாராவே**
**அயலார்கள் பெற்ற கண்ணே**
**என்னவென்று சொல்வேனடி**
**அடியடியே**
**எம்மனத்து ஆசையெல்லாம்.**

புகழ்ச்சியை விரும்பாத பெண்களே கிடையாது என்று சொல்லலாம். தன்னை ஒருஆண் "நீ தான் உலகத்திலேயே சிறந்த அழகி. உன்னைப்போல் அழகுள்ள பெண்ணை நான் கண்டதே இல்லை; காணவும் முடியாது- என்று சற்று உயர்த்திக் கூறிவிட்டால்போதும். பெண் உச்சாணிக் கிளையேறி உட்கார்ந்து விடுகிறாள். தன்னை அவ்வளவு உயரத்திற்கு ஏற்றிய அந்த ஆடவனுக்கு தன் நெஞ்சத்தில் தனியாக ஒரு இடத்தை ஒதுக்குகிறாள். சுருங்கச்சொன்னால் அவனுக்கு அடிமையாகி விடுகிறாள். நம் கதையில் வரும் கன்னியும் அதற்குச் சான்றாகவிளங்குகிறாள். அவளே தன் உள்ளத்தைத் திறந்து காட்டுகிறாள் பாருங்கள்.

**இத்தனைநாள் மறைத்ததற்கு**
**...அடியம்மா**
**என் தாயே மாப்பு வேணும்.**
**பொறுப்பற்றுப் போகவில்லை.**
**பொல்லாங்கு நேரவில்லை.**
**கல்லாங்குப் பள்ளத்திலே......**
**காளையுடன்**
**கருத்தொன்று பட்டனடி.**

மகளின் செய்கையைப் புரிந்து கொண்ட தாய் இவள் சொல்லும் அந்தக் காளையாராக இருக்கும்? அவன் தன் இனத்தைச் சேர்ந்தவன் தானா இல்லையா? என்பதையெல்லாம் தெரிந்துகொள்ளத்துடிக்கிறாள். அவள் மனக்குமுறல் கேள்வியாக ஒலிக்கிறது.

**கைபடாத மாம்பழத்தை**
**கற்கண்டுத் தேன் சுளையை!**
**நெய்யுருக்கும் வெண்ணைதனை**
**......அடிபெண்ணே**
**மையல்பற்றி கொண்டதாரோ?**

கைபடாத மாம்பழமாம். கற்கண்டுத்தேன் சுளையாம் தன் மகள். அப்படிப்பட்ட தன்மகளை கொள்ளை கொண்டவன் யார்? ஒளியாமல் சொல்லிவிடு என்று கேட்கிறாள்.

மறைக்க முடியாது. மறைத்துக் கேட்கிறாள் தாய் கொந்தளிப்புடன்-

**மாடுமேய்க்கும் குப்பன் மகன்**
**மல்லன் சிறுவேலனிடம்**
**மனதைப் பறிகொடுத்த.........**
**அடிபெண்ணே**
**மந்திரம்தான் என்னடியே!**

கேவலம் மாட்டுக்காரச் சிறுவனிடம் மனதைப் பறிகொடுப்பதா? அவமானம்! ஏற்றத்தாழ்வு எனும் கருநாகம் படமெடுத்தாடுகிறது தாயின் வடிவில். தாயைச் சாந்தப்படுத்த முயன்றாள் கன்னி.

**மந்திரம் ஏதுமில்லை**
**தந்திரமும் இல்லையம்மா**
**புந்தியிலே ஒன்றுபட்டோம்...**
**நாங்கள்**
**முந்தியிலே ஒன்று பட்டோம்.**

என்ன துணிவு! எவ்வளவு நிதானம்! தயங்காமல் கூறிவிடுகிறாள் கன்னி. நாங்கள் மனத்தால் ஒன்றுபட்டோம். அதோடு முந்தானை விரித்து உடலாலும் ஒன்று பட்டோம் என்றே கூறி விடுகிறாள்.

வேறு வகையில்லாமல் தாய் சும்மா இருந்து விடுகிறாள். ஆனால் முன்போல மகளைத் தோட்டம் துரவுகளுக்குத்தனியாக அனுப்புவதில்லை நாட்கள் நகர்ந்தன.

இளைஞனால் அவளை பார்க்காமல் இருக்க முடியவில்லை. அவள் மட்டும் அதற்கு விதிவிலக்கா? எப்படியும் வேலனைச்சந்தித்தேயாக வேண்டும் என்று துடித்துக்கொண்டிருந்தாள். ஒருநாள் தாய் தந்தையர் வீட்டிலில்லை. குடத்தை எடுத்து இடுப்பில் வைத்தாள். விரைந்தாள் ஊருணியைநோக்கி. கண்களோ இருமருங்கிலும் அவனைத் தேடிக் கொண்டே இருந்தன. எதிர் பார்த்தது வீண் போகவில்லை. சொல்லி வைத்தாற்போல் வேலன்அரசமரத்தடியில்நின்று கொண்டிருந்தான். அவளைப் பார்த்ததும் அவனுக்கு ஒரே மகிழ்ச்சி. உதடுகள் அசைகின்றன.

**வேலி யழிந்ததென்று**
**விறகுக்கு நான் வருவேன்**
**கன்றுக்குட்டி தேடவென்று...**
**அட்டடா**
**கரையோரம் நீ வருவாய்.**

கோதைகூறுகிறாள். நம்காதல் என் பெற்றோர்களுக்குத் தெரிந்து விட்டது. அது மாத்திரமல்லஊரேநம்மைப்பற்றிப்பேசுகிறது. என்னால் வெளியே தலை நீட்ட முடியவில்லை. நாம் இருவரும் ஒரு ஜாதியில் பிறந்தவரில்லையாதலால் நம் கல்யாணத்தையும் இவ்வூர் மக்கள் ஏற்க மாட்டார்கள். ஆகையால் நாம் சேர்ந்து வாழ ஒரு யோசனை கூறு மச்சான் எனக் கேட்கிறாள். அவனுக்கு ஒரே குழப்பம் திண்டாடுகிறான். அவன் தவிப்பைக் கண்ட கன்னி அவளே சொல்லுகிறாள்—

**நீ கருப்பு நான் சிவப்பு**
**ஊரெல்லாம் ஒமலுப்பு**
**ஒமலுப்புத் தீர்ந்தவுடன்.........**
**ஆசைமச்சான்**
**ஓடிப்போவோம் ரெண்டு**
**பேரும்.**

அன்பு மச்சானே நம் இருவரின் பொருத்தத்தைப் பற்றி இவ்வூர் மக்கள்பொறாமைப் படுகிறார்கள். கொஞ்ச நாள் விலகி இருப்போம். ஊர் நம்மைமறந்துவிடும். ஆகையால் நாம் இருவரும் இவ்வூர் மக்களின் கொள்ளிப்பார்வைக்கு எட்டாத ஒரு பிரதேசத்திற்குச் சென்று பிழைத்துக்கொள்ளலாம்என்று யோசனை கூறுகிறாள் கன்னி. வேறு வழியறியாத வேலனும் ஒப்புக் கொள்ளுகிறான்.

# நீ கருப்பு நான் சிவப்பு ஊரெல்லாம் ஒமலுப்பு!

**ஆசைக்குகந்த மச்சான்**
**அன்பெனக்குத் தந்த மச்சான்**
**பாசமிகுந்த மச்சானே! ஆசை**
**மச்சான்**
**பச்சமெல்லாம்உம்மேலேதான்.**

இவ்வாறு கன்னியும்காளையும் பல நாட்கள் சந்திக்கிறார்கள். எத்தனை நாளைக்குத்தான் கள்ளச் சந்திப்பு வெற்றிகரமாக நடந்துவர முடியும். ஒரு நாள் இல்லையேல்ஒருநாள் சமுதாயத்திற்குத் தெரிந்துதானே ஆக வேண்டும். எதிர் பார்த்தது நடந்துவிட்டது. அவர்கள் களவொழுக்கம் சமுதாயத்தின் கண்களுக்குத் தெரிந்தே விட்டது. புகார் பறக்கிறது கன்னியைப் பெற்ற தாயிடம். தாய் மெதுவாகக் கேட்கிறாள்.

**நாலாறு மாதமாக**
**நான் சுமந்து பெற்ற கண்ணே**
**பால்நிலவு போன்ற முகம்......**
**அடிபெண்ணே**
**பசலைநிறம் ஆனதென்ன?**
**சிறுகுடமும் தாங்காமல்**
**சிலையாகும் உன்னிடைதான்**
**உருமாற ஞாயமென்ன.........**
**அடிபெண்ணே**
**உள்ளபடி சொல்லிவிடு!**

தாய் காரணம் காட்டி சாதுரியமாகக் கேட்கிறாள். மறுக்க முடியுமா கன்னியால்? மறைக்கத்தான் வழியுண்டா? சொல்ல வேண்டிய சங்கதிதான். இப்பொழுது தாயே கேட்டுவிட்டாள். சந்தர்ப்பம் ஒத்துவந்தது; துணிகிறாள். நிதானமாகவே சொல்லுகிறாள்.

**பத்துமாதம் சுமந்து**
**பாங்குடனே பெற்றவளே !**

**தாலும் பயனில்லை.** எனவே கன்னி கூறிவிடுகிறாள்.

**கல்லாங்குப் பள்ளத்திலே**
**கருத்தொத்துப் போனதினால்**
**மல்லனவன் வேலனுடன்......**
**நான்**
**சல்லாபம் செய்ததுண்டு!**

நான் நேசித்தவன் சாதாரண ஆள் அல்ல; நல்ல மல்லன். நானும் அவரும் கருத்தாலும்— உடலாலும் ஒன்று பட்டோம் என்று கூறி அவன் பெயரையும் சொல்லிவிடுகிறாள்.

வேலன்என்றதும் கன்னியின் தாய் அசந்து விடுகிறாள். மாட்டுக்காரன் மகன்வேலனா?என்று வினா எழுப்புகிறது அவள் நெஞ்சம். சேச்சே அந்த அற்பச் சிறுவனிடமா தன்மகள் மனதைப்பறிகொடுத்தாள் - தன்னையே பாழ்படுத்திக் கொண்டாள். வெட்கம். வெட்கம். கொதித்

காதலர்கள் குறிவைத்த திருநாளும் வந்தது. நடுநிசியில்திருடர்களைப் போல் சந்தித்தனர். உடுத்தியிருந்த ஆடையைத் தவிர வேறு எந்த உடமையும் இல்லை அவர்களிடம். ஊரை விட்டுப் புறப்படுகிறார்கள். கண்களில் கண்ணீர், நெஞ்சத்தில் நாட்டை விட்டுப் பிரியும் வேதனை வேதனை வெடிக்கிறது வாய் விட்டுச் சொல்லுகிறார்கள்—

**என் தாய் பொன்னாடே**
**எழில் மிகுந்தநன்னாடே**
**பின்னுமெப்பப்பார்க்கிறோமோ**
**......நாங்கள்**
**போகின்றோம் இப்பொழுதே.**

காதலர்களின் கால்கள் ஊரைப் பிரிக்கும் பாதையில் வேகமாக நடை போட்டுக் கொண்டிருந்தன. எதிர் காலத்தைப் பற்றிய அவர்கள் நெஞ்சிலே பிறக்கப் போகும் தங்கள் குழந்தையைப் பற்றிய இன்பம் மேலோங்கியிருந்தது. இதுவரையிலும் மேகத்தில் மறைந்திருந்த நிலவுப் பெண்ணாள் மெதுவாக எட்டிப் பார்த்தாள்.

### அன்பளிப்பு ரூபாய் ஐந்து கிடைக்கப்பெற்றோம். நன்றி !

தஞ்சை தோழியர் சுசீலா-சண்முகம் என்பார் "நல்ல பாம்புக்கு, நாய்வாலுக்கு, மரம்தாவும் மந்திக்கு, கீரல் விழுந்த இசைத்தட்டுக்கு, போதிமரத்துப் புத்தனுக்கு யார் யாரை ஒப்பிடலாம்"—எனக் கேள்வி கேட்டிருந்தார். சரியாகப் பதில் அமைந்தால் ரூபாய் ஐந்து அன்பளிப்புத் தருவதாக எழுதியிருந்தார்.

அவர் கேள்விக்கு விடை 17-2-63 இதழில் வெளியாகியிருந்தது. அது அவருக்குத் திருப்திகரமாக இருந்ததால் **'தென்னகத் தலைவன்'** வளர்ச்சிக்கு ரூபாய் ஐந்து அன்பளிப்பாக அனுப்பியுள்ளார். தோழியர் **சுசீலா-சண்முகம்** அவர்களின் அன்புக்கு நமது இதயங் கனிந்த நன்றி உரித்தாகுக.

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்கனவே சர்க்காரின் கவனத்திற்கு வந்திருக்கிறது. ஆனல் சென்ற மாதம் இதே சிறைச்சாலைக்குச் சற்று தொலைவில் நடைபெற்றுள்ள கொலையை அரசாங்கம் கவனித்து நோக்கியபின்னர், இப்போது கொல்லப்பட்டவன்தான் சிங்கராயன் என்று சர்க்கார் தீர்மானித்திருக்கிறது. ஆகையால் பழைய வழக்கில் பல பொய்ச் சாட்சிகளைக் கொண்டு உன்னையும் உன் மனைவியையும் தண்டிக்க நேர்ந்தமைக்கு சர்க்கார்வருந்தி உங்கள் இருவரையும் விடுதலை செய்து உங்களுக்கு உதவித் தொகையாக ரூ. 1000/-யும் தந்திருக்கிறது"—என்று வந்திருந்த பெரிய அதிகாரிஒருவர் எடுத்துச் சொன்னர்.

வீரணன்முதலில்நம்பவில்லை. சிறை அதிகாரி ஜெகதீசன் அவனருகில் வந்து வீரணன் முதுகைத் தட்டி,

'குற்றவாளிகள் பிறப்பதில்லை முட்டாள்தனம் மனிதனை குற்றவாளியாக்கி விடுகிறது.கோபம் அவனைக் கொலைக்காரனுக மாற்றிவிடுகிறது. கோபப்படாமல் வாழக் கற்றுக்கொள். செவந்தி உனக்கும்தான்!" என்றார்.

ஜெகதீசன் கடைக்கண்ணில் நீர் அரும்பி நின்றது. ஆயிரக்கணக்கான கைதிகள் எட்டி நின்று, புதுமணத் தம்பதிகளை பார்ப்பது போல் பார்த்தார்கள்.

ஃ ஃ ஃ

ஜெகதீசன் மாளிகை அமைதியாக இருந்தது. வீரணன் செவந்தியை அழைத்துக் கொண்டு திலகவதியம்மையாரைப் பார்க்கப் போனன். அவன் கையில் இரண்டு மாலைகள் இருந்தன.

திலகவதியம்மையார் வீட்டுக்குள்ளே சாம்பிராணிப் புகை போட்டுக் கொண்டிருந்தார்.

"அம்மா!"

"செவந்தி! வீரணு! எனக்கு ரொம்ப சந்தோஷம்! நீங்கள் புதுப்பிறவிகள்! அமைதியாகப் பிழைக்கப் பழகிக்கொள்ளுங்கள். செவந்தி இங்கேயே இருக்கலாம்! எனக்கும் துணையாக இருக்கும்" என்ருள்.

செவந்தியின் கண்களில் நீர் பூத்தது.

செவந்தி, திலகவதியாரின் கழுத்தில் மாலையைப் போடப் போனள்!

எனக்கு ஏன் மாலை. உள்ளே வா! என் பிள்ளைகளுக்குப் போடு! நல்ல பிள்ளைகளைப் பெற்றேன். கடமை தவருதவர்கள் என் பிள்ளைகள்!அவர்களுக்குப் போடு மாலையை!" என்று செவந்தியை உள்ளே அழைத்துப் போனள் திலகவதி அம்மையார்.

உள்ளே இரண்டு படங்கள் இருந்தன. ஒன்று சிறை அதிகாரி ஜெகதீசன் படம்! இன்னென்று...செவந்திக்கு அடையாளம தெரியவில்லை. திலகவதியார் முகத்தைப் பார்த்தாள்.

"இவன்தான் ஜெகதீசன்! இதோ இருக்கிருனே இவன் இளையவன். ஆனல் இப்போது இல்லை. சுட்டுக்கொன்று விட்டார்கள். பெயர் தங்கப்பாண்டியன்" என்று திலகவதியார் சொல்லி முடிப்பதற்கும் வீரணன் அந்த அறைக்குள் நுழைவதற்கும் சரியாக இருந்தது.

"ஐயோ, தாயே!" என்று கதறினன் வீரணன்.

"என்ன வீரணு? வீரணு! என்ன உடம்புக்கு! சொல்லு!"—திலகவதியார் கேட்டார்!

வீரணன் மயங்கிக் கிடந்தான். விழித்துப் பார்க்கும் போது, திலகவதியாரும் செவந்திமாலையும் விசிறிக் கொண்டிருந்தார்கள். வீரணன் பெரியம்மாளை வணங்கினன். அடுத்து செவந்தியைப் பார்த்தான்.

"சாகும் வரை கண் கண்ட தெய்வமான இந்த நாச்சியாருக்கே உழைக்கப் போகிறேன்" என்ருள்.

"அதைத்தான் நானும் சொல்ல இருந்தேன்" என்றான் வீரணன.

கைக்குழந்தை—பெண் குழந்தை தவழ்ந்து வந்தது.

"தாயே, எனக்கு அனுமதி வழங்க வேண்டும்—என் குழந்தைக்கு திலகவதி என்றுபெயர் வைக்கப்போகிறேன்" என்றான் வீரணன்.

திலகவதியம்மையார் சிரித்தார். அந்தச் சிரிப்பில் பெருந்தன்மை தியாகசீலம் எல்லாம் சேர்ந்து நின்றன.


(முற்றும்)

## அறிமுகம்

### ஆடுதுறைத் தொகுதி

### எம். எல். ஏ.

# கோ. சி. மணி



தஞ்சைத் தொகுதியிலேயே பெரிய தொகுதி ஆச்சே...!

"அங்கே உங்கள் கழகம் வெற்றி பெறுமா?"

"கடந்த 57-தேர்தலில் பொறுப்புத் தொகையை இழந்தீர்களே...அதற்கு முன்னல் நடைபெற்ற தேர்தலில் நீதிக்கட்சியின் பெருந்தலைவராக விளங்கிய நெடும்பலம் சாமியப்பா தோற்ற தொகுதி என்பதை மறந்து விட்டீர்களா?'அது காங்கிரசின் கற்கோட்டை..."

இப்படிப் பலர் சொன்னர்கள். பலவிதமாகக் கருத்துத் தெரிவித்தார்கள்.

ஆனல் ஆடுதுறை தொகுதியில் கழக வேட்பாளர் கோ. சி. மணி வெற்றி பெற்றபோது மாற்று முகாம்களிலிருந்து கிடைத்த வாழ்த்தும் வரவேற்பும் அதிகம்.

நல்லதொரு தொண்டனை தொகுதி சட்டமன்றஉறுப்பினராகப்பெற்று விட்டோம் என்பதில் எல்லோருக்குமே மகிழ்ச்சி.

மணியின் தொண்டுள்ளத்திற்குச் சான்று......

தேர்தல் நேரத்தில் முதலமைச்சர் காமராசர் பேசிய பேச்சுத்தான் எவ்வளவு ஆடுதுறை தொகுதியில் அவர் பேசிய தேர்தல் பிரசாரக் கூட்டம் அனைத்திலும் சொன்னர்.

**"ஆளைப் பார்த்து ஓட்டுப் போடாதீங்க**...ஸ்தாபனத்தை காப்பாற்ற காங்கிரசுக்கு ஓட்டு போடுங்க......நான் கவனிச்சுக்கிறேன்."

"ஆளைப் பார்த்து ஓட்டுப் போடாதீங்க" என்று முதலமைச்சர் கூறியது மணி தன்னுடைய தொண்டால் தொகுதியில் பெற்றிருக்கும் செல்வாக்கை உணர்ந்ததால்தான்.

சாமானியர்கள் முகாம் தி.மு.க. என்பதற்கு சான்று பகரும் தோற்றமுடையவர் தான் தோழர் கோ. சி. மணி.

தோழர் கோ. சி. மணி சம்தப்படாமல் எந்த விவசாயபிரச்சினையும் அந்த வட்டாரத்தில் முடிவு பெற்றதில்லை...

நிலத்தகராறு, குத்தகைக்கு விடுவதில் வாங்கியதில் ஏதோ குழப்பம், இப்படி நில சம்பந்தமான பிரச்சினைகளில் சமரசம் காண்பவர்களாகயிருந்தாலும் சரி, வழக்கு மன்றங்களை நாடிச் செல்பவர்களாக இருந்தாலும் சரி மணியைக் கலக்காமல் செய்பவர்கள் அரிது!

அவருக்கே தனி ஆர்வம் நில பிரச்சினைகளில் ஈடுபடுவதென்ருல்......சளைக்காமல் பேசுவார் விவசாய சம்பந்தப்பட்ட பிரச்சனைகளை அந்தத் தொகுதி உழவர் பெருங்குடி மக்களிடம் இவருக்கு மதிப்பு அதிகம். அதனல் அங்குள்ள மடாதிபதிகளுக்கு இவரிடம் கசப்பு **அதிகம்.**

அதற்காக அஞ்சித் தன்னுடைய பணிகளைக் குறைத்துக் கொண்டதில்லை!

மக்களிடம் மட்டும் இவர் மதிப்பைப் பெற்றிருக்கவில்லை! ஆட்சியாளர்களிடம் கூட மதிப்பைப் பெற்றிருக்கிருர்.

இவரது நெருங்கிய உறவினர் ஒருவர் செய்த பெரும் குற்றத்தை காவல் துறையினரால் கண்டுபிடிக்க முடியாமல் இருந்ததைக் கண்டுபிடித்துக் கொடுத்தார் மணி.

நீதிக்காக உறவை மதிக்காத மணி நேர்மையும் இலட்சிய உறுதியும் தொண்டுள்ளமும் மிக்கவர்.

தஞ்சை மாவட்ட இயக்கத் தேனீக்களில் ஒருவர் மணி.

ஆம்; கொள்கைப் பணி அதன் மறுபெயர் கோ.சி.மணி.

— மாமூலன்

"தென்னகத் தலைவன்" உரிமை விளக்கம்

| | |
|---|---|
| வெளியிடும் இடம்: | 31, பார்த்தசாரதிப்பேட்டைத் தெரு, சென்னை-6. |
| வெளியாகும் நாள்: | (வாரம் ஒரு முறை) ஞாயிற்றுக்கிழமை. |
| அச்சிடுபவர் பெயர்: | ச. சொக்கலிங்கம், இனம்: இந்தியர். முகவரி: பாரதம் பிரஸ், 14, உஸ்மான் ரோடு, சென்னை-17. |
| வெளியிடுபவர் பெயர்: | கோ. தினகரன். இனம்: திராவிடர். முகவரி: 31: பார்த்தசாரதிப் பேட்டைத் தெரு, சென்னை-6. |
| ஆசிரியர் பெயர்: | கோ. தினகரன். இனம்: திராவிடர், முகவரி: 31 பார்த்தசாரதிப் பேட்டைத் தெரு, சென்னை-6. |
| பத்திரிகையின் உரிமையாளர்: | கோ. தினகரன். இனம்: திராவிடர். முகவரி: 31 பார்த்தசாரதிப் பேட்டைத் தெரு சென்னை-6. |

யானுகிய, கோ. தினகரன் மேற்கண்ட விவரங்கள் யானறிந்த வரையில் உண்மையானவை என்று நம்பிக்கையுடன் உறுதியாகக் கூறுகிறேன்.

3-3-63

(ஒப்பம்) கோ. தினகரன்.

கே: ஒரு திரைப்படத்தின் வெற்றி தோல்விக்கு காரணம் யார்?

ஆர். எம். திருவேங்கடம், அரக்கோணம்.

ப: வெற்றிக்குக் காரணம் ரசிகர்கள். தோல்விக்குக் காரணம் தயாரிப்பாளர்கள்.

கே: சென்னைக்கு வந்து மூன்று நாள் தங்கியிருந்தேன். ஒரு திரைப்பட ஷூட்டிங்கூட பார்க்க முடியவில்லையே?

ப: ச்சுச்சுச்சு... பாவம்!

கே: சென்னைக்கு வந்தால் முதலில் என்ன பழகிக்கொள்ளவேண்டும்?

ப: முதலில் பாதையில் நடக்கப் பழகிக்கொள்ளவேண்டும்! எல்லா திரைப்பட நடிகர்களையும் பார்த்துவிட்டுத்தான் ஊர் திரும்புவது என்ற மேலான எண்ணத்தை மாற்றிக் கொள்ள வேண்டும். ஸ்டுடியோ சுற்றும் ஆசையால் கையிலிருக்கும் பணத்தை ஏமாற்றுப் பேர் வழிகளிடம் கோட்டை விட்டு- தர்மம் கேட்கலாமா? தற்கொலை செய்து கொள்ளலாமா என்ற பரிதாப நிலைமையை உண்டாக்கிக் கொள்ளாமல் வந்த வேலையை முடித்துக் கொண்டு ஊர் திரும்ப வேண்டும். வந்த வேலை பொழுது போக்குத்தான் என்றால் சென்னையில் ஸ்டுடியோ மட்டுமல்ல-பார்க்க வேண்டியவை எத்தனையோ இருக்கிறது.

கே: கம்யூனிஸ்டுகளைப் பற்றி 'முரசொலி' தவறான செய்தி வெளியிட்டுவிட்டு பின் மன்னிப்புக் கேட்டுவிட்டதாக இங்கு கம்யூனிஸ்டுகள் துண்டு நோட்டீஸ் அடித்து வெளியிட்டிருக்கிறார்கள். உண்மையை விளக்குவீர்களா?

சி. கலைமணி, விளாங்குரிச்சி

என். முருகன், டி. கோபால், நான்குனேரி.

ப: மதுரைத் தோழர் ஒருவர் எழுதிய கடிதத்தை "ஆசிரியருக்கு கடிதம்" பகுதியில் 'முரசொலி'யில் வெளியிட்டிருந்தார்கள். அதை எதிர்த்தே தங்கள் மானம் போய்விட்டதாகக் கம்யூனிஸ்டுகள் வழக்குத் தொடர்ந்திருந்தார்கள். பிறகு கம்யூனிஸ்டு கட்சி பாரட்லாவும் முரசொலி நியமித்திருந்த வழக்கறிஞரும் பேசிக்கொண்ட தற்கிணங்க முரசொலியில் "வருந்துகிறோம்" என்று போட்டால் மட்டும் போதும் என்று, மானத்தைக் காப்பாற்ற வழக்குத் தொடுத்திருந்த கம்யூனிஸ்டுகள் ஒப்புக்கொண்டார்கள். 'முரசொலி' இதழில் வருந்துகிறோம்வெளி வந்தது. வெளியாகியிருந்த அந்தக் கடிதத்தோடு மேலும் சில ஆதாரங்களை எடுத்துக் கொண்டு வாதாடியிருந்தால் கம்யூனிஸ்டுகளின் மானம் மாஸ்கோ வரை ஓடியிருக்கும்.




நெருக்கடி மிகுந்த இந்த நேரத்தில் 'முரசொலி' அதை முக்கியமாகக் கருதாமல் பெருந்தன்மையோடு வருந்துகிறோம் வெளியிட்டது. வருத்தத்திற்கும் - மன்னிப்பிற்கும் வித்தியாசம் தெரியாத கம்யூனிஸ்டு குட்டிச்சாத்தான்கள் முரசொலி மன்னிப்புக் கேட்டதென்று துண்டுப் பிரசுரம் வெளியிட்டுத் தூவிக்கொண்டிருக்கிறார்கள்.

கம்யூனிஸ்டுகளின் யோக்கியதையை, லம்பாடித்தனத்தை-அணு அணுவாகக் கிழித்துக்காட்டி வருகிறோம் "தென்னகத் தலைவனில் ஆதாரத்துடன். மானமிருந்தால் இந்தப் பக்கம் திரும்பி மறுக்கச் சொல்லுங்கள் பார்க்கலாம். அதுகளுக்கு ஏது மானம்! அவர்கள் தொழிலே ஈனம்! அதைத்தான் காட்டிவிட்டதே சீனம்!

கே: திராவிட கழகத்தில் இப்பொழுது ஏற்பட்டுள்ள குழப்பத்திற்கு சம்பத்துதான் காரணம் என்கிறார் என் நண்பர் ஒருவர்; தங்கள் பதிலென்ன?

வீ. செ. கோவிந்தசாமி, வீரமலை.

ப: சம்பத்துதான் முழுக்காரணமல்ல. ஐயாவின் சர்வாதிகாரம் பாதி. சம்பத்தின் தசாவதாரம் மீதி.

கே: கம்யூனிஸ்டுகளின் ஊழல்களைத் தாங்கள் அம்பலப்படுத்திவருவதால்-தங்களையும் கூடலரசன் அவர்களையும் கொலை செய்துவிடக் கம்யூனிஸ்டுகள் முயலுவதாக எங்கள் வட்டாரத்தில் ரகசியப்பேச்சு அடிபடுகிறது. தாங்கள் எப்பொழுதும் பாதுகாப்புடன் இருப்பதே நல்லது. இந்தக் கொலைகாரர்களைத் திருத்த வழியே இல்லையா?

ஆறு. வீராச்சாமி, திருச்சி.

சி. பெருமாள்சுந்தரம், கடக்காவூர்

ஆர். வி. முருகேசன், நீராவி.

(இது போன்ற அஞ்சல்களும்-மிரட்டல் கடிதமும் நமக்குத் தினசரி வந்துகொண்டி




ருக்கிறது. இதே சாயல் நிறைந்த கேள்வியை முப்பதுக்கு மேற்பட்ட நண்பர்கள் கேட்டிருப்பதால் எல்லோரும் இதையே பதிலாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறோம்.)

ப: நாம் கம்யூனிஸ்டுகள் மீது சுமத்தும் குற்றமிதுதான். கொலை செய்தார்கள், கொள்ளையடித்தார்கள், கற்பழித்தார்கள், காட்டிக் கொடுத்தார்கள் என்பது. இதனால் அவர்கள் மானம் போகிறதென்றால் இதை இல்லை என்று அவர்கள் ஆதாரத்துடன் மறுக்கட்டும். அதுதான் முதுகெலும்பு உள்ளவன் செய்யக் கூடியவேலை. அதை விட்டு விட்டு கொலை செய்துவிடுவோம் என்று மிரட்டினால் நாம் அவர்கள் மீது சுமத்தும் முதல் குற்றத்தை அவர்களே பகிரங்கமாக ஒப்புக்கொள்ளுகிறார்கள் என்று பொருள். அவர்களின் மிரட்டலுக்கு நானும்-நண்பர் கூடலரசனும் பயந்து விடப்போவதில்லை.

கே: 'முரசொலி'யில் நெல்லைச் சதிவழக்கு ஏன் வெளிவரவில்லை?

— க. வரதராசன், காவேரிப்பாக்கம்.

ப: அதுதான் 'தென்னகத் தலைவ'னில் வெளிவந்து கொண்டிருக்கிறதே.

கே: தமிழ்வாணன், தி.மு.க. என்பதை திராவிட முன்னேற்றக் காங்கிரஸ் என்று மாற்றிக் கொள்ளலாம் என யோசனை கூறியிருக்கிறாரே, தங்கள் கருத்தென்ன?

பா. மாசிலாமணி, சென்னை-30.

ப: தி. மு. கழகம் என்ற வார்த்தையைக்கேட்டாலே காமராசருக்குக் கலக்கம் ஏற்படுவதால் – கழகம் என்ற பெயரைக் கேட்டு அவர் அடிக்கடி வாய் புலம்பாமலிருக்க அவர் பயத்தைக் குறைக்க - தமிழ்வாணன் சிந்தனை இப்படி ஓடியிருக்கலாம். பாவம் காமராசருக்கு நெருங்கிய நண்பர் தமிழ்வாணன்.

கே: தென்னகத் தலைவனாகிய எங்கள் பேரறிஞர் அண்ணா அவர்களை சம்பத் கீழ்த்தரமாகத் தாக்கி வருவது கண்டு எங்கள் மனம் மிகவும் கஷ்டப்படுகிறது இதற்கு நாங்கள் என்ன செய்வது?

எஸ். எஸ். மணி, திருவனந்தபுரம்.

ப: ஊசி விற்று வரும் நரிக்குறத்தியைப் பார்த்திருக்கிறீர்களா? அவளை நோக்கி தெரு நாய் குரைத்துக்கொண்டேஓடி வரும். அதை அவள் சட்டை செய்வதே இல்லை.

கே: அண்ணா அவர்களுக்கு ஜார் மன்னன் முடிவுதான் ஏற்படும் என்கிறாரே சம்பத்.

பா. மாசிலாமணி, சென்னை-30.

ப: அவர் தன்னைப் பற்றி இரவிலே கண்டகனவை இப்படி வெளிப்படுத்தியிருக்கிறார் போலும்.

கே: இந்திமொழிப் பரீட்சை பற்றி பக்தவத்சலத்திற்கும் - லால்பகதூர் சாஸ்திரிக்கும் ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாட்டைப் பற்றித் தாங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

எல். முனியாண்டி, அம்பத்தூர்.

ப: 'இந்தி மொழிப் பரீட்சை ஒரு கேலிக்கூத்து' என்று சொல்லும் அளவுக்கு பக்தவத்சலத்திற்கு துணிவு வந்திருக்கிறதே. அந்தத் துணிவை உண்டாக்கிக் கொடுத்த தமிழ் நாட்டு மாணவர்கள் நமது பாராட்டுக்குரியவர்கள்.

## வீரகேசரி மாத்திரை

நித்திரையில் ஜீவசக்திகள் வெளியாவதைத் தடுத்து நரம்புகளுக்கு வலுவைக் கொடுத்து, ஜீவசக்தியை அதிகப்படுத்தி நீடித்து இருக்கவும், புத்துணர்ச்சியையும் அளிக்கும் சிறந்த மாத்திரை. (அனுபவமுள்ளது—நற்சாக்ஷிகள் பெற்றது)

24—மாத்திரை ரூ. 6—00
50—மாத்திரை ரூ. 12—00

(தேவைக்கு எழுதவும்):—சித்த வைத்திய பண்டிட்

**S. V. R. கண்டர். R. I. M. P.**

அரிசிப்பாளையம். வீ பஜார். P-O (சேலம்)

# கலைச்சோலை

## இருவர் உள்ளம்

கலைஞர்மு. கருணாநிதி திரைக் கதை வசனம் எழுதியுள்ள பிர சாத் மூவிசாரின் 'இருவர் உள் ளம்' மார்ச் மாதம் வெளிவரும் எனத் தெரிகிறது.

லெட்சுமியின் 'பெண் மனம்' - என்ற கதையைத் தழுவிய இப் படத்தில் பாலாஜி, ரங்காராவ் சரோஜாதேவி, பத்மினி பிரிய தரிசினி, லெட்சுமி ராஜம், டி. ஆர். இராமச்சந்திரன் ஆகி யோர் நடிக்கின்றனர்.

கருத்து நிறைந்த வசனங்கள் கொண்ட இப்படத்தின் பாடல் களை கண்ணதாசனும், இசை அமைக்கும் பொறுப்பை கே.வி. மகாதேவனும் ஏற்றுள்ளனர்.

தயாரிப்பாளரான பிரசாத் இந்தப் படத்தை டைரக்ட் செய்கிருர். 'மனோகரா'வுக்குப் பிறகு இவர் டைரக்ட் செய்யும் படம் இதுவே. படப்பிடிப்பு கள் முடியும் தருவாயில் உள் ளன.

## வானம்பாடி

கண்ணதாசன் புரொடக் ஷன்சார் தயாரித்து, நாதன் டைரக்ஷனில் வளரும் "வானம் பாடி" முடியும் தருவாயில் உள்ளது.

இலட்சிய நடிகர், தேவிகா, முத்துராமன், புஷ்பலதா, ரத்ன மாலா ஆகியோர் நடிக்கும் இப் படத்திற்கான பாடல்களை கண்ணதாசன் எழுதியுள்ளார்.

## கே. ஆர். ஆர். பிக்சர்ஸ் அறிஞர் அண்ணு கதை வசனம் எழுதுகிருர்.

நடிப்பிசைப் புலவர் கே.ஆர். இராமசாமி, கே. ஆர். ஆர். பிக் சர்ஸ் என்ற பெயரில் படக்கம் பனி ஒன்றை ஏற்படுத்தியுள் ளார்.

இவர் தயாரிக்கும் முதல் படத்திற்கான கதை வசனத் தை அறிஞர் அண்ணு எழுத, எஸ். எஸ். இராசேந்திரன் நடிக்கிருர். படப்பிடிப்பு விரை வில் ஆரம்பமாக இருக்கிறது.

## மதன் தியேட்டர்சின் அடுத்தபடம்!

'ஆடிப் பெருக்'கைத் தயாரி த்த மதன் தியேட்டர்சார் தங் களது அடுத்த படத்திற்கான வேலைகளில் ஈடுபட்டுள்ளனர்.

ஜெமினி கணேசன், தேவிகா, நடிக்கும் இப்படத்தைப் பாஸ்கர் ராஜ் இயக்க, கே. வி. மகாதே வன் இசையமைக்கிருர். படப் பிடிப்பு விரைவில் துவங்கும்.

## பச்சை விளக்கு

கதாசிரியரானஜி. பாலசுப்பிர மணியம் பி. ஏ., சுவாதி புரடக் ஷன்ஸ்என்றபடக்கம்பெனியை ஏற்படுத்தி, பச்சைவிளக்கு என்ற படத்தைத் தயாரிக் கிருர்

பச்சை விளக்கிற்கான கதை வசனத்தை அவரே எழுத, 'மணியோசை'யை டைரக்ட் செய்தமாதவன் பி. ஏ., இதை யும் டைரக்ட் செய்கிருர்.

கண்ணதாசன்எழுதும்பாடல் களுக்கு கே. வி. மகாதேவன் இசையமைக்க, சிவாஜிகணே சன், தேவிகா, கண்ணும்பா சந்திரகாந்தா, வி. கே.ராமசாமி நாகேஷ், ஓ. ஏ. கே. தேவர், கண்ணன், விஜயன் குலதெய் வம் ராஜகோபால் ஆகியோர் நடிக்கின்றனர். நெப்டியூன் ஸ்டு டியோவில் படம் தயாரிக்கப் படும்.

## 'அன்புள்ள அத்தான்' ஆரம்பவிழா

புரட்சி நடிகர் எம். ஜி, ஆர். நடித்தமாடப்புருவைத்தயாரித் த பி.வள்ளிநாயகம்(பி. வி.என். புரொடக்சன்ஸ்) 'அன்புள்ள அத்தான்'—என்ற பெயரில் புதிய படமொன்றைத் தயாரி த்து வருக்கிருர்.

இந்தப் படத்தின் ஆரம்ப விழா கடந்தமாதம் 23-ந் தேதி மெஜஸ்டிக் ஸ்டுடியோவில் நடைபெற்றது. விழாவிற்கு சிவாஜி கணேசன், எம் ஆர். ராதா, டி. என். சிவதாணு, மனோரமா, முத்துராமன், குல தெய்வம் ராஜகோபால்,டைரக் டர் ப. நீலகண்டன், கே. வி. மகாதேவன் வந்திருந்தனர்.

அன்று சிவாஜி கணேசனும், எம். ஆர் இராதாவும் நடித்த காட்சிகள் படமாக்கப்பட்டன. மற்றும் சாவித்திரி, தேவிகா, முத்துராமன், மனோரமா விஜ யன் ஆகியோரும்இப்படத்தில் நடிக்கின்றனர். இயக்கும் பொறுப்பை ப. நீலகண்டனும், இசையமைக்கும் பொறுப்பை கே. வி. மகாதேவனும் ஏற்றுள் ளனர். மெஜஸ்டிக் ஸ்டுடியோ வில் படம் வேகமாக வளரு கிறது. திரைக்கதை வசனம்— இளங்கோவன். பாடல்கள் கண்ணதாசன், மருதகாசி.

## யாருக்குச் சொந்தம்

'காட்டுரோஜா'விற்குப்பிறகு மாடர்ன் தியேட்டர்சார் வெளி யிடப்போகும் படம் 'யாருக்குச் சொந்தம். இப்படத்தில் தேவிகாநடிக்கும்சில காட்சிகள் அண்மையில் படமாக்கப்பட் டன. இப்படத்தை சீனுவாசன் டைரக்ட் செய்கிருர்.

வாசகர்களுக்கு
தேன் மணக்கும் தித்திப்பான செய்தி ...!

தேனொழுகும் சிறுகதைகள் தித்திப்பான படபடாசரிப்புச் சித்திரங்கள், சிந்தைகவரும் அரசியல் கார்ட்டூன்கள்.... வாராவாரம் நடிகர் நடிகைகளின் கேள்வி பதில்கள் அவர் களுடைய வாழ்க்கை வரலாறு அவர்கள் விரும்பும்கணவன் மனைவிகள் பெண்கள் சட்டை தைப்பது எப்படி என்பதை டைரக அளிக்கும் சுவைமிகுந்த பேட்டிப்படங்கள். பாட்டிமார்கள் தரும் திண்ணைப்பேச்சுக்கள், கல்லூரிமாணவிகள் தரும் ருசிகர அந்த ரங்க தகவல்கள். மற்றும் சினிமா செய்திகள், மருத்துவர்க ளின் விளக்கங்கள். ஆண் பெண் சமைக்க கற்றுக்கொள்ள வேண்டிய அநேகசுவை மிகுந்த தகவல்கள் இவை அனைத் தையும் தாங்கி சிறுவர்முதல் பெரியவர்வரை உள்ள ஆண் பெண்களுக்கு உணர்ச்சியூட்டி விருந்தளிக்கும் தேன்பாகாக மணக்கும் பூச்செண்டாய் வெளிவருகிறது!

24 பக்கங்கள் பாசம் 16 காசுகள்

எல்லாசெய்திகள் அடங்கியகதம்பப் பத்திரிகை
ஏஜண்ட் தோழர்கள் முந்திக் கொள்ளுங்கள்..
ஒரு பிரதிக்கு 75 காசுகள் முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர் எல்லா ஊர்களிலும் தேவை!

18, பெல்ஸ்ரோடு. பாசம் சென்னை-5



வேகமாக வளர்ந்து வரும் 'பொம்மை' படத்தில் லெட்சுமி ராஜமும் புதுமுகம் ராகவனும்.

ஆசிரியர், வெளியிடுபவர்: ஜி. தினகரன், 31, பார்த்தசாரதிப்பேட்டைத் தெரு, சென்னை-6
அச்சிடுபவர்: எஸ். சொக்கலிங்கம், பாரதம் பிரஸ், 14, உஸ்மான் ரோடு, சென்னை-17.